பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 10 | செவ்வாய்க்கிழமை | (23.03.2004) | தொலைபேசி - 222 3378 | ஒலி 95

# இந்தியாவில் புலிகள் மீதான தடை

# மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும்

## பொடா மறு ஆய்வுக் குழுத்தலைவர் அறிவிப்பு

(நமது நிருபர்)

**பொடா பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டிருப்பதை எதிர்த்து மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரிக்கப்போவதாக பொடா மறு ஆய்வுக்குழுத்தலைவர் சகாரியா அறிவித்துள்ளார்.**

பொடா பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வைகோ மற்றும் நக்கீரன் கோபால் ஆகியோரின் கைது குறித்து விசாரித்து வரும் சகாரியாவுடன் அவரது வழக்கறிஞர் விவாதித்துக்கொண்டிருக்கும் போதே மேற்படி தகவலை பொடா மறு ஆய்வுக குழுத்தலைவர் சகாரியா வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி மத்திய அரசுக்கு மனு ஒன்று வந்துள்ளது.

இதனையடுத்து மத்திய அரசு அது தொடர்பான விசாரணையை மேற்கொள்ளுமாறு கடிதம் ஒன்றை எமக்கு அனுப்பியுள்ளது.

தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் 2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05ந் திகதி பொடா சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு மனு ஒன்றை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்திருந்தார். இந்த மனு மத்திய அரசினால் அப்போது நிராகரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அதே வருடம் நவம்பர் மாதம்12ந் திகதி மீண்டும் அந்த மனுவை மத்திய அரசுக்கு நெடுமாறன் அனுப்பிவைத்திருந்தார். இந்த மனுவை 2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04ந் திகதி மத்திய அரசு பொடா மறு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி வைத்தது.

இந்நிலையில் இம் மனுவை மறு பரிசீலனை செய்து மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்புவதா? இல்லையா? என்று முடிவுசெய்யவுள்ளோம்.

பொடா பயங்கரவாத தடைச் சட்டம் 19ஆவது பிரிவின் கீழ் எந்தவொரு தடைசெய்யப்பட்ட இயக்கத்தையும் மறு ஆய்வு செய்வதற்கு பொடா மறு ஆய்வுக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.

விடுதலைப்புலிகள் இயக்கம் தம்மீதான தடையை நீக்குமாறு முன்னர் நேரடியாக மனு செய்திருந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கம் பொடா சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட பின் அவர்கள் தடையை நீக்குமாறு கோரி நேரடியாக எந்த மனுவையும் தரவில்லை என்றும் சகாரியா கூறினார். (ம)

## அரச ஊடகத்தை மட்டும் நடுநிலையுடன் செயற்படக் கோருவது சாத்தியமற்றது

### தேர்தல் கண்காணிப்பு மதிப்பீட்டு நிலையம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சிக்கே நாட்டில் உள்ள பெரும்பாலான ஊடகங்கள் ஆதரவு வழங்கிவருகின்றன. எனவே, அரச ஊடகங்களை மாத்திரம் பாரபட்சமின்றி நடக்குமாறு கோருவது நடைமுறைரீதியாக சாத்திய மற்றது.

இவ்வாறு தேசிய தேர்தல் கண்காணிப்பு மதிப்பீட்டு நிலையம் தேர்தல் ஆணையாளருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச ஊடகத்தை மாத்திரம் சுதந்திர அமைப்புக்களாக மாற்றுவதன்மூலம் சகல அரசியல் கட்சிகளுக்கும் நியாயம் வழங்க முடியாது.

நாட்டிலுள்ள தனியார் இலத்திரனியல் ஊடகங்களும் பத்திரிகைகளும் ஐக்கியதேசியக் கட்சிக்கே சாதகமான ஊடகக் கொள்கையையே கடைப்பிடிக்கின்றன. தேர்தலுக்கு இன்னும் ஒருசில நாட்களே உள்ளன. தனியார் ஊடகங்களின் கொள்கை எதிர்க் கட்சிகளுக்குப் பாதகமாகவே உள்ளன. தற்போது நாட்டில் 30 தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகள் செயற்படுகின்றன.

அரசதுறை ஆக 5 பத்திரிகை ஊடக நிறுவனங்களையே தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது. ஆனால், தனியார் துறையினரிடம் 22 பத்திரிகை ஊடக நிறுவனங்கள் உள்ளன. இந்நிலையில், அரச ஊடகங்களை மாத்திரம் பாரபட்சமின்றி நடக்குமாறு கோருவது நடைமுறைக்குப் பொருந்தாது.

ஐக்கியதேசியக் கட்சி எந்தவொரு அரச ஊடக நிகழ்ச்சியிலும் பங்குபற்றுவதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றது. இதனால், அரச

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேரர் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் ஹம்பகா மாவட்ட வேட்பாளரான தேரர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு இளைஞர் குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளார்.

இரவு 10மணியளவில் நீர்கொழும்பு கட்டுவபிட்டிய பகுதியில் விகாரையில் வைத்து அவர் தாக்கப்பட்டுள்ளார்.

வேட்பாளர் பத்திரத்தை வாபஸ் பெறுமாறு தாம் தாக்கப்பட்டதாக தேரர் கூறியுள்ளார். தற்போது அவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த)

## தபால்மூல வாக்களிப்பு நாளை ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் 02ந் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இத் திகதிகளில் வாக்களிக்க தவறும் தபால் மூல வாக்களிக்கும் வாக்காளர்களின் வாக்களிப்பு குறித்து அவ்வப்பகுதிக்கு பொறுப்பான மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஏற்பாடுகளை மேற்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)




நாடாளுமன்ற பொதுத் தேர்தல்-2004
யுத்தத்தில் அழிந்த நம் தாயகத்தை கட்டியெழுப்ப...
புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்த...
மத்தியில் கூட்டாட்சியுடன் மாநில சுயாட்சியை நிறுவ...
மனித நேயம், பன்மைத்துவம், ஜனநாயகம் மலர...

மக்களே ஆணையிடுங்கள்!
வீணைக்கு வாக்களியுங்கள்!!



X

(சி-7448)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



தமிழினத்தின் விடியலுக்கான தீர்வு
சுயநிர்ணய உரிமையுடனான
சுதந்திர வாழ்வு.....
வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான

திரு.வீ.ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)
இல. 4

சுயேச்சைக்குழு - 01 | X | 4 | 10



ச.முத்துலிங்கம்
(முன்னாள் தலைவர், உடுவில் கிராமசபை)
இல. 10

(சி-7449)


வாரிவளவு கற்பக விநாயகர் துணை

**யாழ். நகரில் மக்கள் மனதறிந்து தனித்துவத்துடன் இயங்கும் கஜமுகன் ஹாட்வெயர் நிறுவனத்தினர் ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்து ஆறாவது ஆண்டில் காலடி வைக்கும் இவ் வேளையில், அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறார்கள்**









CALTEX

# கஜமுகன் ஹாட்வெயர்






- சகலவிதமான கட்டிடப் பொருட்கள், சீமெந்து, கம்பி, CIC பெயின்ற் வகைகள் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்,
- CALTEX உராய்வு நீக்கிகள்
- PHONEX கதிரைகள், பிளாஸ்ரிக் பொருட்கள் என்பனவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்,

# கஜமுகன் ஹாட்வெயர்

**147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 2833, 7282**

(C/7458)

# ஐ.தே.மு. ஆட்சியமைப்பதற்கு 63 வீதமான தமிழர்கள் ஆதரவு

(கொழும்பு)

**உலகின் முன்னணி சந்தைப்படுத்தல் தகவல் நிறுவனமான ORG-MARGSMART நிறுவனம்இலங்கையின் தேர்தல் தொடர்பான கருத்துக்கணிப்பொன்றை அண்மையில் நடாத்தியிருந்தது. பெப்ரவரி 21முதல் 28வரை நடாத்தப்பட்டஇக் கருத்துக் கணிப்பின் முடிவுகள் வருமாறு**

இன ரீதியாக கட்சிகளின் ஆதரவு குறித்து திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின்படி,

இலங்கைத் தமிழரில் 63வீதமானோர் ஐ.தே.முன்னணிக்கும் 19 வீதமானோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் 3வீதமானோா இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கும் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தியத் தமிழரில் 80 வீதமானோா ஐக்கிய தேசிய முன்னணிக்கும் 8வதமானோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும ஆதரவு தெரிவிப்பதுடன்,12 வீதமானோர் எவருக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற முடிவினை எடுக்காதவாகளாகவும் காணப்படுகின்றனர்.

சிங்களவரில் 31வீதமானோர் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் 49 வீதமானோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணிக்கும் ஒரு வீதமானோர் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் ஆதரவு வழங்குவதுடன் 19வீதமானோர் எந்தவித தீர்மானமும் எடுக்கவில்லை.

முஸ்லிம்களில் 44வீதமானோர் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் 19 வீதமானோர் ஐக்கிய மககள் சுதந்திர முன்னணிக்கும் 6வீதமானோர் முஸ்லிம் காங்கிரஸிற்கும் ஆதரவு தெரிவிப்பதுடன் 31வீதமானோர் யாருக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற முடிவினை இன்னமும் எடுக்கவில்லை.

சமய ரீதியாக கட்சிகளுக்குள்ள ஆதரவு குறித்துப் பார்க்குமிடத்து,

இந்துக்களில் 72வீதமானோர் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் 14 வீதமானோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் 1வீதமானோர் இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸிற்கும் ஆதரவு தெரிவிப்பதுடன் 13வீதமான இந்துக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதுபற்றி இன்னமும் முடிவெடுக்கவில்லை.

பௌத்தர்களில் 50வீதமானோா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் 30வீதமானோர் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் 1வீதமானோர் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் ஆதரவளிப்பதுடன், 19வீதமானோர் இது பற்றிய தீர்மானம் எதையும் எடுக்கவில்லை.

முஸ்லிம்களில் 49வீதமானோர் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் 19 வீதமானோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் 5வீதமானோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் ஆதரவு வழங்குவதுடன் 24 வீதமானோர் இது பற்றிய தீர்மானம் எதையும் எடுக்கவில்லை.

கிறிஸ்தவர்களில் 36வீதமானவர்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் 39 வீதமானவர்கள் ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணிக்கும் ஆதரவளிப்பதுடன் 22 வீதமானவர்கள் எந்தக் கட்சிக்கு ஆதரவளிப்பது என்பது பற்றித் தீர்மானிக்கவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தமையுடன் வடக்கு- கிழக்கைச் சேர்ந்த 62 வீதமா னோர் உடன்படவில்லை. தெறகைச சேர்ந்த 51வீதமானோர் ஏற்றுக் கொண டுள்ளனர்.

இதுதவிர, ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசி, ஜே.வி.பி.கூட்டுக்கு அதிகாரப பசியே காரணம் என்பதை வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 58வீதமானோரும் தெற்கைச் சேர்ந்த 45வீதமானோரும ஒப்புக்கொண்டுள்ளதுடன், இக் கூட்டினால் நாட்டிற்கு நலன் இல்லை என்பதை 50 வீதமான வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்களும் 34வீதமான சிங்களவரும் ஏற்றுள்ளனர்.

தவிர, பிக்குமார் தேர்தலில் போட்டியிடுவதை 94வீதமான வட-கிழக்கு வாழ் தமிழர்களும் 76வீதமான தெற்கு வாழ் சிங்களவர்களும் ஏற்றுக கொள்ளவில்லை என்பதுடன், 92 வதமான இந்துக்களும் 73 வீதமான பௌத்தர்களும் 84 வீதமான முஸ்லிம்களும் 84வீதமான கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை எனபது இக்கருத்துக் கணிப்பு மூலம் தெரியவந்துள்ளது.

(உ-6)

# எவருடைய தயவும் எமக்குத் தேவையில்லை

## சந்திரசேகரன் உரை



(கொழும்பு)

நாம் எமது மக்களுக்காக அரசியல் செய்கின்றோம். இதில் யாருடைய தயவையுமோ அல்லது அனுதாபத்தையுமோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

தமிழ் மக்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதனை அவர்களே தீர்மானிக்க வேண்டும். அதேபோல மலையக மக்கள் முன்னணி எவ்வாறு தேர்தலில் போட்டியிடுவது என்பதனை தீர்மானிக்க வேண்டியது மலையக மக்கள் முன்னணியே.

நோர்வூட் பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அமைசசரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

நாங்கள் ஐ.தே.க.வில் போட்டியிடவில்லை என்பதற்காக பலர் இன்று ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். மலையகத் தமிழர்களின் உரிமைகளுக்காக ஐ.தே.க.வுடன் என்னமாதிரி உறவு அமைய வேண்டுமென்பதிலும், ஜனாதிபதியுடன் என்னவிதமான கோரிக்கைகளை முன்வைக்கவேண்டுமென பதிலும், அல்லது ஜே.வி.பியுடனான நிலைப்பாடு என்னவென்பதிலும் முடிவெடுக்க வேண்டியது மலையக மக்கள் முன்னணியே. இதில் யாருடைய கைகளையும் பிடித்துக் கொண்டு நடைபோட வேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்கு திராணியற்றவர்களும்-தமிழ் மககளுக்கு தமது அரசியல் கருத்துக்களை தெளிவாகச் சொல்லுவதற்கு திராணியற்றவர்களும் வேண்டுமானால் இன்னும் இரண்டு வருடங்களின் பின்னர் அல்லது 5 வருடங்களின் பின்னர் நடக்க இருக்கும் தேர்தலுக்கு இப்போதே ஐ.தே.க.வில் அல் லது வேறு கட்சிகளில் டிக்கட்டு களை ஒதுக்கிக்கொள்ளட்டும். அது அவர்களின் இயலாமை.

ஆனால் மலையக மக்கள் முனனணிக்கு அந்தத் தேவை இல்லை. நாங்கள் கடைசித் தினம்வரை முடிவெடுக்கவில்லை என்பதனை சர்வ தேசப் பிரச்சினையாக ஆக்கி சில தொழிறசங்கவாதிகள் கதைக்கினறார்கள். ஐ.தே.க.வில் நாம் டிக்கெற் கேட்கவில்லை. ஆனால் எமக்கு 3 ஆசனங்கள் தருவதாகவும் எம்மைத் தனித்து போட்டியிட வேண்டாம் என்றும கட்டுப்பணம் செலுத்துவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்பு வரை ஐ.தே.க.உயர் மட்டம் எம்மை வலியுறுத்தியது. ஆனால் நாங்கள் கூறினோம்-எம்மை சுதந்திரமாக இயங்கவிடுங்கள். இது எமது பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின் தன்மானப் பிரச்சினை இதனை விட்டுக்கொடுக்கமுடியாது என்று.

அதேநேரத்தில் ஐ.தே.க.வுடன் இணைந்து வேறுபுல மாவட்டங்களில் நாம் போட்டியிடுகின்றோம். எம சக்தியை தனித்துக்காட்ட வேண்

# ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் அஞ்சல் மூலம் அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட ஓய்வூதியர்கள் தமது வவுச்சர்களைப் பிரதேச செயலகங்களில் வந்து பெற்றுச் செல்லத் தேவையில்லை எனவும் வழமை போலவே அவர்களுடைய ஓய்வூதிய வவுச்சர்கள் அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுவதில் இடம் பெறுவதாகக் கூறப்படுகின்ற சில மோசடிகள் தொடர்பில் கண்டறியும் வகையில் மீளாய்வு செய்யும் பொருட்டே ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளின் ஓய்வூதியர்கள் வவுச்சர்களைப் பெற நேரில் அழைக்கப்படுவதாகவும்,

நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட ஓய்வூதியர்கள் குறித்த மீளாய்வு கடந்த ஜனவரி மாதமே இடம்பெற்று விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

### கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர் வரும் 27ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் வலி. மேற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலி. மேற்குப் பிரதேச செயலர் ஏ.மோகன்றாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த சகல கலைஞர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ-49)

# வடகிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் இடைஞ்சல்களுக்குள் வாழ்கின்றனர்

## மனித உரிமைகள் நிலையம் ஐ.நாவிடம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வடககு-கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை இன்னமும் நெருக்கடிககுள்ளேயே இருக்கிறது என மனித உரிமைகளுக்கான தமிழ் நிலைய்த்தின் பொதுச் செயலாளர் வி.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில இடம்பெயர்ந்த இம் மக்கள், நடமாடும் சுதந்திரம் கூட மறுக்கப்பட்ட நிலையிலுள்ளார்கள் என்பதை இவர் ஐ.நா.விற்கு அறிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைசசாத்திடப்பட்டு 24 மாதங்களாகியும் படையினர் பொதுமக்களின் கட்டடங்களைவிட்டு வெளியேறவில்லை.

நூற்றுக்கணக்கான மக்களின் சொந்த இடங்களில் குடியேறும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தசாப்தகாலத்தில் வடக்கு-கிழக்கில் 2ஆயிரத்து 76 இந்துக் கோவில்களும் 299தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. தென்பகுதியில் 89தேவாலயங்கள் பௌதத பிக்குகளின் வழிகாட்டலில் இடிக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி சில தனியார் வானொலி நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.மக்களின் கருத்துச்சுதந்திரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர் ஐ.நா.விடம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-6)




தமிழின விடுதலையை முன்னிலைப்படுத்தவும்
சீவல் தொழிலாளர்களின் நலன் காத்திடவும்
தமிழ் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்
திரு. கி.சிவநேசன்
அவர்கள் அமோக வெற்றியடையச் செய்ய உங்கள் பொன்னான வாக்குக்களை வீட்டிற்கு நேரேயும் இலக்கம் 4ற்கு மேலேயும் புள்ளடியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் .

அனுசரணை:- மு. பாக்கியநாதன், முன்னாள் தலைவர், பனை அபிவிருத்திச் சபை

(8515)

# இயற்கை அன்னை வழங்கிய நோயகற்றும் கறிவேப்பிலை

நம் நாட்டில் காடு, மலை, வீட்டுத் தோட்டம் ஆகிய இடங்களில்



கறிவேப்பிலை பயிராக்கப்படுகின்றது. நறு மணத்தைக் கொடுக்க வல்ல இந்தக் கறிவேப்பிலை, உணவு செரிக்கவும் உதவுகின்றது. உடலின் வெப்பத்தையும் தணிக்கின்றது.

கறிவேப்பிலையின் இலை, ஈர்க்கு, பட்டை, வேர் முதலியன உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இக் கறிவேப்பிலை சுவையின்மை, பழஞ்சுரம், மந்தம், மந்தபேதி, மலகட்டு, சீதபேதியால் வரும் வயிற்றுளைவு, பிரமேகம், வாந்தி, அம்மைத் தழும்பு, வயிற்றுவலி, அஜீரண பேதி, பித்தம், உடல் சூடு, கிரகணி ஆகிவற்றை நீக்கக்கூடியது.

### தீரும் வியாதிகள்

தேவையான கறிவேப்பிலையை நிழலில் உலர்த்தி அத்துடன் மிளகு, உப்பு, சீரகம், சுக்கு முதலியவற்றைப் பொடியாக்கி, சாதத்தோடு இப் பொடியைக் கூட்டி, சிறிதளவு நெய்விட்டுக் கலந்து சாப்பிட்டால் மந்தம், மந்தபேதி, மலக்கட்டு, கிரகணி, பிரமேகம் ஆகியவை குணமாகும.

காய்கறிகளுடன் கறிவேப்பிலையையும் சேர்த்து சமைத்தால், அது சுவையையும் மணத்தையும் கூட்டவல்லது என்பதை நாம், யாவரும் அறிவோம்.

மேலும் துவையல் செய்து சாப்பிட்டால் வாய்க்கசப்பு, பித்தம், வாய்நீர் ஊறல் ஆகியவையும் குணமாகும்.

இலையுடன் சுட்டபுளி, வறுத்த உப்பு, வறுத்த மிளகாய் ஆகியவைகளைக் கூட்டித் துவையல் செய்து ஆகாரத்துடன் சாப்பிட்டால் ஆரோசகம், அதிசாரம், பித்தவாந்தி, பித்தச் செரியாமை, வயிற்றுளைச்சல், பொருமல் ஆகிய நோய்கள் குணமாகும்.

ஈர்க்கின் புறணியைத் தாய்ப்பால் விட்டு இடித்து. சாறைப் பிழிந்து எடுத்து, அத்துடன் லவங்கம், திப்பிலி ஆகியவற்றைச் சேர்த்து இரண்டு அல்லது மூன்று முறை குழந்தைகளுக்குப் புகட்ட வாந்தி நிற்கும். பசி உண்டாகும்.

## மருத்துவ விளக்கம்

கறிவேப்பிலை ஈர்க்கு 12 கிராம், சுக்கு 12 கிராம், ஓமம் 12 கிராம் எடுத்துக் கொள்ளவேண்டும். இவைகளை இரண்டு லீட்டர் நீரில் போட்டு, கால் லீட்டர் வரும்படி வற்றக் காய்ச்ச வேண்டும். பிறகு வடிகட்டி, அதற்குத் தகுந்தபடி சர்க்கரை சேர்த்துக் கொடுக்க அஜீரணவாயு நீங்கும்.

தேவையான கறிவேப்பிலையை எடுத்துச் சுத்தம் செய்து, அம்மியில் வைத்து மென்மையாகும் வரை அரைத்து, நெல்லிக் காயளவு எடுத்து, இருவேளை வீதம் மூன்று நாட்கள் தொடர்ச்சியாகச் சாப்பிடும் பட்சத்தில், சீதபேதி குணமாகும்.

தேவையான அரிசியுடன் இலையைச் சேர்த்து, உரலில் இட்டுக் குற்றி, தேய்த்துப்புடைத்து விட்டு, அவ்வரிசியுடன் உலர்ந்த மிளகாய் கூட்டிக்கருக்கி, சாந்து நிறம் வரும் பக்குவத்தில் எடுத்து பின்னர் வசம்புச் சாம்பல், சிறு நாகப்பூ அதிவிடயம் ஆகியவற்றையும் அத்துடன் சேர்த்து நீர் விட்டுச்சுண்டக் காய்ச்சிக் கொடுக்க அஜீரண பேதி முதலியன நீங்கும். மேற்படி இலையில் சிறிதும், வயதிற்குத் தகுந்தபடி மூன்று மிளகும் சேர்த்து, நெய்யில் வறுத்து, வெந்நீர் விட்டு அரைத்து, கரைத்து, குழந்தைகளை நீராட்டிய பின் அவர்களுக்கு மந்தம் நீங்கி பசி உண்டாகும்.

இதன் இலை, பட்டை, வேர் இவற்றைக் கஷாயம் செய்து கொடுக்கப் பித்தம் நீங்கும்; வாந்தியும் நிற்கும்.

### அம்மைத் தழும்பு

தேவையான இரண்டு கைப்பிடி இலையை மாத்திரம் (ஈர்க்கு நீக்கிவிட்டு) எடுத்துக்கொள்ள வேண்டும். கசகசா 9 கிராம், கஸ்தூரி மஞ்சள் 4கிராம் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்துக் கொள்ளவும். பிறகு அரைத்ததை அம்மைத் தழும்புகள் இருக்கும் இடத்தில் பூசி வைத்து, அரை மணி நேரம் ஊற வைத்து பின் நீராடவும். அம்மைத் தழும்புகள் மறையும் வரை இவ்வாறு செய்யவும். இத்துடன் கடலைமாவு, பச்சைப் பயிறு மாவு ஆகியவற்றையும் உபயோகித்து வருதல் நலம். இவ்விதமாக இரண்டு வாரம் செய்து வந்தால் அம்மைத் தழும்புகள் மாறிவிடும்.

### வயிற்றுவலி நீங்க

பச்சைக் கறிவேப்பிலையை எடுத்துச் சுத்தம் செய்து, அம்மியில் வைத்துக் கொஞ்சம் நீர் விட்டு அரைத்துச் சுண்டைக்காயளவு சாப்பிட வலி நீங்கும். மேலும் இது இரத்தத்தையும் சுத்தி செய்கின்றது. மூல பேதியைக் கட்டுப்படுத்துகின்றது.

### சூதக வாய்வு நீர்க்கோவை நீங்க

தேவையான கறிவேப்பிலையை எடுத்துச சுத்தம் செய்து, உலர்த்தி, உரலில் போட்டு இடித்து, ஒரு இலேசான வெள்ளைத்துணியினால் வடிகட்டி, அத் தூளைச் சேர்த்து வைத்துக் கொண்டு, தினமும் வெருகடி அளவு எடுத்து, சிறிது சர்க்கரை கலந்து வாயில் போட்டு, கொஞ்சம் இளஞ்சூடான நீரை அருந்தவும்.

உணவுடன் சேர்க்கப்படும் கறிவேப்பிலையை சிலர் சாப்பிடும் பொழுது நீக்கிவிடுகிறார்கள். அது தவறு. உணவோடு சேர்த்துமென்று விழுங்குவதே நல்லது. இவ்வாறு உணவோடு செல்லும் இக் கறிவேப்பிலை, வயிற்றிலுள்ள வாயுவை அகற்றி, மலவாய்க்கட்டு ஏற்படாமல் காப்பதுடன், பசியைத் தூண்டி ஜீரண சக்தியையும் கொடுக்கும். வாயுவைப் போக்கி மலத்தை வெளியேற்ற முயற்சியை மேற்கொள்ளும்.

### துவையல்

கறிவேப்பிலையை எடுத்தச் சுத்தம் பார்த்து பிறகு அம்மியில் வைத்து இதற்குத் தேவையான உழுத்தம் பருப்பு, பெருங்காயம், கடுகு, மிளகாய் வற்றல் ஆகியவற்றைச் சிவக்க வறுத்து அத்துடன் சேர்த்து அரைத்து சுடச்சுடச் சாதத்தில் போட்டுப் பிசைந்து உண்டால் நல்ல குணம் காணும், சாப்பிட்டவுடன் மலம் கழிப்பவர்களுக்கும், குடல் நோய் உள்ளவர்களுக்கும் இத் துவையல் நல்ல பலனைக் கொடுக்கும். தவிர இது குடலுக்கு பலத்தையும் கொடுக்க வல்லது. மேலும் பத்தியத்திற்கும் ஏற்ற ஒன்றாகும்.

### கறிவேப்பிலைப் பொடி

கறிவேப்பிலை 35 கிராம், சுக்கு 35 கிராம், பெருங்காயம் 35 கிராம், திப்பிலி 17 கிராம், இந்துப்பு 17 கிராம் எடுத்து ஒன்றாகச் சேர்த்து வெயிலில் காயவைத்து பிறகு எல்லாவற்றையும் சேர்த்து உரலில் போட்டு இடித்து சலித்து, மெல்லிய

டாக்டர் ஏ.ஆர்.என் துரைராஜ்

துணியால் வடித்து இத் தூளை ஒரு போத்தலில் சேமித்து வைத்துக் கொள்ளவும். உணவில் ஒரு கரண்டியளவு இந்தப் பொடியை போட்டு நெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்துப் பிசைந்து உண்டால் நன்றாக ஜீரணமாகும். அஜீரணம் ஏற்படாது. மேலும் உடல் வலிமை பெறும். நல்ல பசி எடுக்கும். பித்தம் அகலும் வெப்பத்தைத் தணிக்கும்.

இதை ஜீரணப் பொடி என்ற பெயரால் அழைக்கலாம். வைத்தியரின் ஆலோசனையைக் கேட்டு அதன்படி பொடியை தயாரிக்கவும். ஐம்பது கிராம் கறிவேப்பலையில் அடங்கியிருக்கும் ஊட்டச் சத்துக்கள் பின்வருமாறு;

சுண்ணாம்புச் சத்து - 415 மி.கி, மக்னீஷயம் - 110 மி.கி, அயன் - 66 மி.கி, தாமிரம் - 0.11, கந்தகம் - 40 மி.கி, குளோரின் - 100 மி.கி.

இயற்கை அன்னை வழங்கியிருக்கும் மூலிகைத் செல்வங்களே நோய் அகற்றும் நன்மருந்துகளாகும். அத்தகைய செல்வங்களில் வேப்பிலையும் ஒன்றாகும். □

## சந்தை திறப்பு

(பொன்னாலை)

சமுர்த்தி அதிகார சபையின் சந்தைப்படுத்தல் திட்டத்தின் கீழ் அராலி மத்தியில் பரீட்சார்த்த சந்தை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் இச் சந்தையை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

அராலி மத்தி சமுர்த்திச் செயலணியின் மேற்பார்வையின் கீழ் இயங்கவுள்ளது. (உ-49)

## கதிரைகள் அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

யா/ வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அதன் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளை 600 கதிரைகளை வழங்கியுள்ளது. (உ-75)

## ஆய்வுக்கட்டுரை அனுப்பலாம்

(பொன்னாலை)

"ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம்" நடாத்தும் உயர் தமிழ்த் தேர்வு நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இலக்கம் 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (உ-49)

## மொத்த விற்பனை நிலையத்தில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை றெக்கிளமேசன் வீதியில் உள்ள இரசாயனப் பொருள் மொத்த விற்பனை நிலையத்தில் இடம் பெற்ற திடீர் தீ விபத்து காரணமாகப் பல லட்சக்கணக்கான பொருட்கள் எரிந்து நாசமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தீவிபத்து மேலும் பரவாமல் இருப்பதற்காக தீயணைக்கும் படையினர் பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருவதாக தீயணைக்கும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, புறக்கோட்டை பாங்சால் வீதியில் உள்ள பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றில் தீவிபத்து ஏற்பட்டதாகவும் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் தீயணைக்கும் படையினர் தெரிவித்துள்ளனர். (ம)

# குடும்பம், கூட்டணி, கொள்கைகள்...

# சோனியா காந்தி சிறப்புப் பேட்டி

கடுமையான தேர்தல் பணிகளுக்கு இடையிலும், காங்கிரஸ் கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமான சேனியாகாந்தி, மூத்த பத்திரிகையாளரான நீரஜா செளத்ரிக்குப் பேட்டியளித்தார். 10, ஜன்பத் சாலை (டில்லி) இல்லத்தில் இரு அமர்வுகளில் அளித்த அப்பேட்டியில், தனது குடும்பம், தன் கணவர் ராஜீவ் காந்தி, மாமியார் இந்திரா காந்தி ஆகியோருடன் அவருக்கு இருந்த உறவு, தான் அரசியலுக்கு வந்தற்கான காரணம், காங்கிரஸ் கட்சியின் கொள்கைகள், கூட்டணி சகாப்தம் உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு அரசியலில் ஈடுபடவேண்டாம் என்று ராஜீவ காந்தியிடம் நீங்கள் மிகவும் வாதாடியதாகக் கூறப்படுகிறதே?

சேனியா காந்தி: அது உண்மைதான். எனது கணவர் அரசியலில் ஈடுபடுவதை நான் கடுமையாக எதிர்த்தேன். முதலில் எனது மைத்துனர் விபத்தில் இறந்தார். அப்போதுதான் ராஜீவ் அரசியலுக்கு வந்தார். மிக அருகில் இருந்து அரசியல் நிகழ்வுகளைப் பார்த்தவள் நான். எனது மாமியார் போராடியதையும், அவரது சகாக்கள் பலர் அவரைக் கைவிட்டு விட்டுச் சென்றதையும் பார்த்திருக்கிறேன். இந்த நாட்டுக்குக் கடமையாற்ற வேண்டும் என்னும் வலுவான உணர்வுக்கும் அரசியலே வேண்டாம் என்ற எனது வற்புறுத்தலுக்கும் நடுவே அவர் அல்லல்படுவதை நான் விரும்பவில்லை. ஒரு வகையில், அவரை நான் இழந்து விடுவேன் என நினைத்தேன்.

கே: தீங்கு நேரும் என்ற உள்ளுணர்வு உங்களுக்கு அப்பொழுதே இருந்ததா?


ப: அரசியலுக்கு வந்துவிட்டால், அதுவும் எனது கணவர் போன்றவருக்கு எல்லாமே மக்கள் தான் எனறு ஆகிவிடும் என நான் கருதினேன்.அதுவரை குடும்பத்துக்காக குழந்தைகளுடனும் என்னுடனும் அதிக நேரத்தைச் செலவழித்துவந்தார் ராஜீவ். வாழ்க்கை அமைதியாகச் சென்று கொண்டிருந்தது.

1984 இல் மாமியார் படுகொலை செய்யப்பட்டபோதுதான் திருப்பம் ஏற்பட்டது. அப்பொழுதுதான், பிரதமர் பொறுப்பை ராஜீவ் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கட்சி முடிவுசெய்தது.

அந்தச் சம்பவங்கள் எனக்கு நன்றாக நினைவிருக்கின்றன. என் மாமியாரை நான் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றேன். காலை முழுவதும் அங்குதான் இருந்தேன். அப்போது மேற்கு வங்கத்தில் சுற்றுப் பயணம் செய்து கொண்டு இருந்தார் ராஜீவ். பிறகுதான் அவர் வந்துசேர்ந்தார். பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவரை வற்புறுத்திய காட்சி இன்றும் பசுமையாக என் நினைவில் நிற்கிறது. வேண்டாம் எனறு உண்மையில் நான் கெஞ்சி மன்றாடினேன். அவர் அதற்கு ஒப்புக்கொள வதை நான் விரும்பவில்லை. அருகே என் மாமியாரின் உடல் கிடத்தப்பட்டு இருக்கிறது. அவருக்கு நேர்ந்ததைப் போலவே என் கணவருக்கும் நேர்ந்துவிடுமோ என்று அஞ்சினேன்.

(தொடரும்)

## இந்தியச் செய்திகள்



பாட்டியாலாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், சீக்கியர்களின் பாரம்பரியச் சின்னமான வாளுடன் பிரதமர் வாஜ்பாய்.

# ராஜீவ் காந்தியின் மகன் அரசியலில் பிரவேசம்

படுகொலை செய்யப்பட்ட இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியன் மகன் ராகுல் காந்தியை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நிறுத்துவதென்று இந்தியாவின் முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருக்கிறது.

ராகுல் காந்தி உத்தரப் பிரதேசமாநிலத்தில் அமெதி தொகுதியில் போட்டியிடுவாரென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இம் முறை சோனியா காந்தி போட்டியிடும் தொகுதி பரேலியாக மாற்றப்பட்டிருக்கிறது.

ராகுலின் சகோதரி பிரியங்கா காந்தி இம் முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவாரா என்று சோனியா காந்தியிடம் கேட்கப்பட்ட போது அது பற்றி நல்ல தருணத்தில் முடிவு வருமென்று அவர் கூறினார்.

இந்திரா காந்தி பரம்பரையில் ஐந்தாவது பரம்பரையைச் சேர்ந்தவரும் இப்போது அரசியலில் பிரவேசம் செய்திருக்கிறார். (சு)

### பயங்கரவாதம் என்ற மனோநிலை மாறும்வரை

# இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சிமுறை தீர்வாகாது

## கொழும்பு பல்கலை அரசியல் பேராசிரியர் ஹலீம்

(கொழும்பு)

**இன்று எமது நாட்டில் இருப்பது தேசிய இனப்பிரச்சினை. இதனை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாக சிலர் நோக்குகின்றார்கள். இந்த மன நிலை மாறும்வரை இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறையினை முன்வைக்க முடியாது.**

**எனவே, இங்கு நிலவுவது இனப்பிரச்சினை என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டு அதனைத் தீர்த்து வைக்க வேண்டும் என முயற்சிக்கும் போதுதான் இலங்கைக்கான ஒரு சமஷ்டி முறை சாத்தியப்படும் என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறைப் பேராசிரியர் கலாநிதி எம்.எச்.ஹலீம்**

இலங்கையின் இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக முன்வைகக்கூடிய சமஷ்டி முறையிலான ஆட்சி குறித்து தேசிய ஊடகம் ஒன்றிற்கு கருத்துரை வழங்குகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஹலீம்,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி மூலமான அதிகாரப் பகிர்வே சரியான தீர்வு என முன்வைககப்பட்ட கருத்துக்களை காலத்துக்கு காலம் எதிர்த்தும் முரண்பட்டும் வந்த தமிழ், சிங்களத தலைமைகள் இப்பொழுது சமஷ்டி தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற ஒருமித்த சிந்தனைக்கு வந்துள்ளன. இது ஓர் மகிழ்ச்சிக்குரிய விடயம்.

ஆனால், இன்று நம்நாட்டில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை என்றும் சமஷ்டி மூலமாக ஒரு அதிகாரப் பகிர்வினை வழங்கினால் தமிழர்களுக்குரிய தாயகத்தைப் பிரித்து வழங்குவது போலாகி விடும் எனவும் சில பேரினவாத அரசியல்வாதிகள் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இது சிங்கள மக்கள் மனதில் பயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால், ஒற்றையாட்சி முறை தவிர்ந்த ஏனைய ஆட்சி முறைகளை அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வினை சமஷ்டி முறையில முன்வைக்க வேண்டுமாயின் சிங்கள சகோதரர்களது மனதில் ஊட்டப்பட்டுள்ள அச்சங்களைக் களைய வேண்டும்.

சிங்கள மக்களிடையே உள்ள இந்த அச்ச உணர்வினைப் பேரினவாதிகள் சாதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்த சந்தர்ப்பவாத அரசியலை முறியடித்து மக்கள் மத்தியில் உலவும் புரளிகளைக் களைந்திருந்தால் என்றோ இனப்பிரச்சினை தீர்ந்திருக்கும்.

ஆனால், இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டாது இருந்தாலே தாம் அரசியலில் நிலைக்கலாம் என்பதற்காகப் பேரினவாதிகள் மென்மேலும் சிங்கள மக்களிடையே அதிகாரப் பகிர்வுகளுக்கு எதிராக புரளிகளை கிளப்பி விட்டுள்ளனர்.

இதனால், சிங்கள மக்கள் தமிழர்களது உரிமைப் போராட்டங்களையும் சமஷ்டிக் கோரிக்கைகளையும் மக்கள் பயங்கரவாதம் என்றும் பிரிந்து செல்வதற்கான கோரிக்கைகள் என்றும் தவறாகக் கருதுகின்றனர்.இந்த மக்களுக்கு எமது பிரச்சினைகளையும் கோரிக்கைகளின் நியாயங்களையும் தெளிவுபடுத்தி அச்சஉணர் வினைப் போக்கவேண்டும்.

எம் உரிமைகள் பறிக்கப்பட்டதனாலேயே நாம் போரா[illegible] வேண்டிய சூழ்நிலை உருவானது.இது பிரிந்து செல்வதற்கான ஓர் பயங்கரவாதப் போராட்டம் அல்ல. எமது சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் எம்மை நாமே ஆளுவதற்கான உரிமை கோரும் போராட்டம் என்ற தன்மையை அவர்களுக்கு உணர்த்தும் வரை சமாதான முயற்சிகளைக் குழப்பும் பேரினவாத சக்திகளுக்குச் சிங்கள மக்களும் துணை போவார்கள்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்களது பிரச்சினைகளுக்கும் இந்த சமஷ்டி முறை மூலம் தீர்வு முன்வைக்கப்படல் வேண்டும்.

இந்தத்தீர்வு எப்படி அமையய வேண்டும் என்ற தீர்மானங்களை முன்வைக்க முஸ்லிம்களுக்கு ஓர் சிறந்த தலைமைத்துவம் அவசியம். ஆனால்,இன்று உள்ள முஸ்லிம் அரசியல் தலைமைகளோ பாராளுமன்ற உறுப்பினர்களோ வெளிநாடுகளுக்குச் சென்று முஸ்லிம்களுக்கு முன்வைக்கப்படவேண்டிய அரசியல் தீர்வுகள குறித்துப் பேச்சுக்களை நடத்துகிறார்களே தவிர மக்களுக்கு ஏந்தவித பயனுள்ள கருமங்களையும் ஆற்றவில்லை.

இவர்களை ஆவலுடன் வழியனுப்பிவைக்கும் முஸ்லிம்களுக்குத் தாம் அங்கு சென்று என்ன செய்தோம் என்பதைக் கூடத் தெரிவிக்கவில்லை.

இதை விட, முஸ்லிம் களுக்கான இடைக்கால நிர்வாக சபை என்ற விடயத்தில் முஸ்லிம் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடியளவு தீமானங் களைக் கூட எடுக்க முடியாதுள்ள முஸலிம்களது தறபோதைய அரசியல் தலைமைகள் எதிர்காலத்தில் மக்களுக்கு என்ன தான் செய் யுமோ எனத் தெரியவல்லை. இன்று காணப்படும் உலக மயமாக்கல் என்ற நிலைப்பாட்டின் கீழ் சர்வ தேச நாடுகளின் தலையீடு எமது நாட்டுச் சமாதான முயற்சிகளில் அதிகம் காணப்படுகிறது. இது குறித்து அனைவரும் விழிப்புணர் வுடன் இருக்க வேண்டும்.

எந்த நாடும் தனக்கென ஒரு இலாபம் கிடைக்காது ஒரு முயற்சி யில் ஈடுபடாது.இல்ங்கை யில இடம்பெறும் சமாதான முயற்சிகள் சர்வதேச நாடுகளின் அனுசரணையுடன் மேற்கொள்ளபபட்டாலும், முற்று முழுதாக அவர்களின் எண்ணப்படி நம் நாட்டுத்தலைவர்கள் நடந்து தவறான ஒரு தீர்வு எம் நாட்டில் எட்டப்படுவதற்கு நம்நாட்டு அரசியல் தலைவர்கள் இடமளிக்கக் கூடாது என்றார். (உ-4,64,60)




அமரர் சுபத்திரன்



திருநாவுக்கரசு ஸ்ரீதரன்



அமரர் பத்மநாபா

தமிழ்மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்காகவும், தமிழ்மக்களின் ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமையை நிலைநாட்டுவதற்காகவும் தன்னையே அர்ப்பணித்த தோழர் றொபேட் (தம்பிராஜா சுபத்திரன்) அவர்களின் வழிநின்று எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் (ஈ.பி.டி.பி) கூட்டமைத்து வீணைச் சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சிரேஷ்ட தலைவர்களின் ஒருவரான **திருநாவுக்கரசு ஸ்ரீதரன்** அவர்களை ஆதரியுங்கள்.

"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது
எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர
எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

தோழர் க.பத்மநாபா



X 6

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்)

# தாய்வான் தேர்தலில் மோசடி

# வாக்குப் பெட்டிகள் சீல்வைப்பு

## மேல் நீதிமன்றம் உத்தரவு

(பால்கொக்)

தேர்தல் வாக்குப் பெட்டிகள் அனைத்தையும் சீல்வைக்கும்படி தாய்வான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் தாய்வானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலினை அடுத்த மேல்நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவையிட்டுள்ளார்.

தேர்தல் முடிவில் தற்போதைய ஜனாதிபதி சென் கியூபியான் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் காரணமாக எதிர்க் கட்சியினர் தேர்தலை எதிர்த்து முறைப்பாடு செய்தததையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இத்தேர்தலில் 3 இலட்சத்து 37 ஆயிரத்து 397 வாக்குகள் செல்லுபடியற்றவை எனக் காணப்பட்டது.

இதனையடுத்தே எதிர்த்துப் போட்டியிட்ட லியான்சான் குழறுபடிகள் நடந்திருக்கலாம் என்று முறைப்பாடு செய்தார்.

(து)



இப்போதைய உலக அழகியான ரோசன்னா டேவிசன், டப்ளின் நகரில் கடந்தபுதன்கிழமை நடந்த புனித பாட்ரிக் தினத்தில் ஐரிஷ் கொடியுடன் அணி வகுப்புக்குத் தலைமை தாங்கிய காட்சி.

### ஈராக் - அமெரிக்கப் போரின்

## ஓராண்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

(லண்டன்)

ஈராக்குக்கு எதிராக அமெரிக்கா தொடுத்த போரின் முதலாவது ஆண்டைக் குறிக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் உலக நாடுகளின் பல நகரங்களில் நேற்று முன்தினம் நடைபெற்றன.

அவுஸ்திரேலியா, அமெரிக்காவிற்குத துணையாக படையை அனுப்பியதற்கு எதிராக நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் செய்ததுடன், தங்கள் நாட்டுப் படைகள் ஈராக்கிலிருந்து திருப்பியழைக்கப்படவேண்டும் என்றும், வலியுறுத்தினர்.

ஈராககிலுள்ள தாய்லாந்துப் படைகள திரும்பவேண்டுமென்று பாங்கொங்கில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதேவேளை ஜப்பானில் மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் ஈராக்போர் எதிர்ப்பு பேரணி நடத்தினர்.

இத்தாலியின் தலை நகர் ரோமிலும் பிரிட்டனிலும் பெருத்த ஆர்ப்பாட்ட எதிர்ப்புப் பேரணி நடைபெற்றது.

(து)

## மராட்டிய வீரரை அவமதித்த

## வெளிநாட்டு எழுத்தாளர் மீது

### வாஜ்பாய் கண்டனம்

(புதுடில்லி)

மராட்டிய அரசர் சிவாஜியையும் அவரது தாயாரையும் பற்றி ஆட்சேபனைக்குரிய விதத்தில் வெளிநாட்டு எழுத்தாளர் ஜேம்ஸ் லெங்ற புத்தகம் எழுதியிருப்பதை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கண்டித்துப் பேசினார்.

மராதவாடாப் பகுதியில் பீத் என்ற இடத்தில் பாரதிய ஜனதாக்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும போது மேற்கண்ட கண்டனத்தைத் தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

இந்த வெளிநாட்டு புத்தக ஆசிரியா எமது நாட்டு விடயத்தில் தலையிடவேண்டாம்; அப்படித் தலையிடுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

நமது கட்சியும் எழுத்தாளரின் செயலைக் கண்டிக்கிறது என்று தெரிவிததார்.

மாநில அரசு வீர சிவாஜிக்கு ஏற படுத்தப்பட்ட களங்கத்தைப் போகக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும. மத்திய அரசும் இந்தவிடயத்தில் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் வாஜ்பாய் தெரிவித்தார். (து)



பரங்கிமலை கண்டோன்மெண்ட் கழக உயர் நிலைப்பள்ளி ஆசிரியை வாங்கி வந்த காய்கறிகளில் "பறவை" வடிவில் காணப்பட்ட தக்காளி.

### மலேசிய நாடாளுமன்றத் தேர்தல்

### பிரதமரின் கட்சிக்கு ஆதரவு

மலேசியப் நாடாளுமன்றம் மற்றும் பிராந்தியங்களுக்கான தேர்தல் வாக்கு எண்ணிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தேர்தலில் இஸ்லாமிய எதிர்க்கட்சிக்கு எதிராக பிரதமர் அப்துல்லா பதாதி பெரும் வெற்றியைப் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்துக்கணிப்புக்களின் படி பிரதமரின் ஆளும் கூட்டணி மலேசிய நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று பலமான முன்னணியை பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்களிப்புக்கள் அமைதியாக நடைபெற்றதாக செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(து)

### மக்களவைத் தேர்தலில்

## விடுதலைச் சிறுத்தைகள் போட்டி

(சென்னை)

தமிழ் நாட்டில் வரும் மக்களவைத தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் போட்டியிட இருக்கும் வேட்பாளா பட்டியலை வெளியிடுகிறது.

மக்கள் கூட்டணி சார்பில் போட்டியிடும் 5 தொகுதிகளுக்கான வேட்பாளா பட்டியலை இன்று வெளியிட இருப்பதாக அதன் செயலாளர் திருமாவளவன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் உரை நிகழ்த்திய திருமாவளவன் தமது கட்சியின் தேர்தல் அறிக்கை விரைவில் வெளியிடப்படுமென்றும் தெரிவித்தார்.

(து)

# இந்திய- பாகிஸ்தான் உறவை

# மீண்டும் குலைப்பாரா முஷாரப்?

## ஒரு பார்வை

இந்திய-பாகிஸ்தான் இரு தரப்பு உறவுகள் மேம்பட்டு வரும்போதெல்லாம் தொடர்ந்து குழப்பி வருவது பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கு வாடிக்கையாகி விட்டது. கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மற்றும் பாகிஸ்தானிய அதிபர் முஷாரப் இருவரும் இணைந்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். பரஸ்பர ஒத்துழைப்பையும், இரு தரப்பு உறவுகளையும் கெடுக்கும் வகையில் அதிபர் ஏதும் செய்யமாட்டார் என்று அனைவரும் அப்போது நம்பினர்.

எப்படியாவது பேச்சுவார்த்தை தொடரவேண்டும் என்ற ஒரே காரணததிற்காகவே தீவிரவாதத்தை முதல் ஒடுக்கவேண்டும் என்ற நிபந்தனைகள் எதையும் இந்தியா விதிக்கவில்லை. இரண்டு நாடுகளுமே முன்னர் இருந்த நிலைகளை மாற்றிக் கொணடு வேறுபாடுகளைக் களைந்து கொள்ள முயற்சி எடுக்கவேண்டும் எனறு முஷராப் தொடர்ந்து கூறி வந்துள்ளார். எனவே காஷ்மீா பிரச்சினையை மையப்படுத்தி நிபந்தனைகளை விதிபபதும் இரு தரப்பு உறவுகளில பாகிஸ்தான் அரசின் சரியான அணுகுமுறை ஆகாது.

சமீபத்தியக் கூட்டறிக்கையிலும், காஷ்மீா பிரச்சினை மையப்படுத்தப் படவில்லை: என்றாலும் ஜம்மு- காஷ்மீா பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளும் அலசி ஆராயப்பட வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஒரு தரப்பாக பாகிஸ்தான் தனக்கு சாதகமாக விளக்கியுள்ளது. இருதரப்பு உறவுகளை மேம்படுத்த எந்த வகையிலும் உதவாது என்பது நிபுணர்களின் கருத்தாகும்.

இரு நாட்டு மக்களிடையே நம்பிக்கை தரும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், அவற்றைத் தொடர்ந்து செயற்படுத்துவதும் மிகவும் அவசியமாகும் என்று உலக நாடுகள் கருதுகின்றன. கடந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் முதலாகவே இஸ்லாமபாத் கூட்டறிக்கையில் ஒப்புக்கொண்டவாறே இந்தியப் பிரதமர் பல நல்லெண்ண நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்த வருவதை உலக நாடுகள் பாராட்டிய வண்ணம் உள்ளன. தீவிரவாதத்தைக் கண்டிக்கிறேன் எனக்கூறும் அதிபர் முஷாரப், இருவேறுபட்ட கருததுக்களை ஒரே நேரத்தில் வெளியிட்டு வருகின்றார்.

தன்னைக் கொலை செய்யத் தீவிரவாதிகள் தொடர்ந்து முயன்று வருகின்றார்கள் என்றும், தான் தீவிரவாதத்திற்கு எதிரானவன் என்றும் கூறும் முஷாரப், ஜம்மு-காஷ்மீர் தாக்கப்பட்டமை குறித்தும் முதலமைச்சர் மத்தியூ முஹமது அவர்களின் மேல் எடுக்கப்பட்ட கொலை முயற்சி பற்றியும், கூறும்போது இது சுதந்திரப் போராட்டக்காரர்களின் செயல்கள் என்று அவ்வப்போது மிரட்டிவருகின்றார்.

பாகிஸ்தான் தனது நிலப்பரப்பை தீவிரவாதத்திற்குப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று கூட்டறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இன்றைய இந்தியா என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட மகாநாட்டில் பதிலளித்துப் பேசிய முஷாரப், காஷ்மீர் பிரச்சினையை அலட்சிப்படுத்த முடியாது என்று தொடர்ந்து கூறிவந்துள்ளார். காஷ்மீா பிரச்சினையில் முன்னேற்றம் ஏற்பட்டால் தான் நல்லெண்ண நடவடிக்கைகள் பலன் தரும் என்று அதிபர் முஷாரப் அவ்வப்போது கூறிவருவதும் வாடிக்கையாகி விட்டது.

இரு நாடுகளும் சேர்ந்து ஜனவரி மாதம் வெளியிட்ட கூட்டறிக்கையில், ஒரே நாட்டிற்கு மட்டும் சாதகமாக, ஒரு தரப்பாக விளக்கமளிப்பது இருதரப்பு உறவுகளை எந்த வகையிலும் மேம்படுத்தாது என்று இந்தியா தெளிவாக பாகிஸ்தானிடம் கூறியுள்ளது. காஷ்மீர் பிரச்சினையை மையப்படுத்தி மற்றப் பிரசசினையில் முட்டுக்கட்டை போடுவதையே தற்போதைக்கு அதிபர் முஷாரப் விரும்புகிறார் என்று தெரிகிறது. காஷ்மீரில் தொடர்ந்து வரும் தீவிரவாதச் செயல்கள் பாகிஸ்தான் வன்முறைக்கான தனது ஆதரவை இன்னும் நிறுத்தவில்லை என்பதை தெளிவாக்கியுள்ளது. சமாதானம் என்றுமே ஒரு வழிப்பாதை அல்ல, எனை உண்மையை பாகிஸ்தானுக்கு தற்போது உணர்த்த வேண்டிய கட்டாயத்தில் இந்தியா உள்ளது. (து-121)

# தென்னாபிரிக்க அணியை தோற்கடித்தது நியூஸிலாந்து

நியூசிலாந்தின் ஒக்கிலாண்டில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 296ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

துடுபபாட்டத்தில் தென்னாபிரிக்க அணிசார்பில் ஹேர்சல் கிப்ஸ் 80 ஓட்டங்களையும் கிரஹாம் ஸ்மித் 88 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக மார்ட்டீன் 76ஓட்டங்களுக்கு 6 விக்கெற்றுக்களையும், ஜேக்கப் ஓரம் 60ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸை கெய்ன்ஸ், ஸைரிஸ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 595ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்கொட் ஸைரிஸ் 170 ஓட்டங்களையும், கிறிஸ் கெய்ன்ஸ் 158ஓட்டங்களையும், ஜேக்கப் ஓரம் 90ஓட்டங்களையும், மக்மிலன் 82 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீசசில் ஷோன் பொலக் 113 ஓட்டங்களுக்கு 4விக்கெற்றுககளையும் மகாயா நிற்னி 110ஓட்டங்களுக்கு 3விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

299ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விககெற்றுக்களையும் இழந்து 348 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணிசார்பில ஜக்ஸ் நுடோவ் 154ஓட்டங்களையும், ஜக்கலிஸ் 71ஓட்டங்களையும், ஹேஸல் கிப்ஸ் 61ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மார்ட்டீன் 5விக்கெற்றினையும், கிறிஸ்கெய்ன்ஸ் 3விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

வெற்றி இலக்கான 51ஓட்டங்களைப பெறுவதற்காக இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பொடுத்தாடிய நியூசிலாந்து அணி ஒரு விக்கெற் இழப்பிறகு 53ஓட்டங்களைப் பெற்று வெற்றியினை தனதாக்கிக் கொண்டது.

பந்துவீச்சில் நிற்னி ஒரு விக்கெற்றினை வீழ்த்தினார். மூன்று போட்டிகள கொண்ட இந்தப் போட்டித் தொடரில் நியூசிலாந்து அணி முதலாவது வெற்றியினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-121)



இந்திய கிரிக்கெற் அணியின் தலைவர் சௌரவ் கங்குலி -பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாமின் மகனுடன் கைகுலுக்குகையில்.

## இன்று பிரட்லிக்கு சத்திரசிகிச்சை

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரட்லி முழங்கால் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளார். இன்று மேற்கொள்ளப்படவுள்ள இச் சத்திரசிகிச்சை காரணமாக அவர் மே மாதம் இடம்பெறவுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-121)

## இந்தியா வர பாக்.அணி விருப்பம்

இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் ஒருநாள் தொடரொன்றில் பங்கேற்கும் விருப்பத்தை பாகிஸ்தான் கிரிக்கெற் சபை வெளியிட்டுள்ளது,

பாகிஸ்தான் கிரிக்கெற் அணி இந்த ஆண்டின இறுதியில் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. அதேவேளை தென்னாபிரிகக அணி இந்த ஆண்டு செப்ரம்பர், டிசம்பர் மாத காலப் பகுதிகளில் இந்தியாவுக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவில் குறுகிய கால சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவே பாகிஸ்தான் விரும்புகிறது.

(உ-121)




செபாங்கில் (மலேசியா) ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற மலேசிய கிராண்ட் பிரீ கார் பந்தயத்தில், முதலிடம் பெற்ற ஜெர்மனி வீரர் மைக்கேல் மாக்கர் (நடுவில்). இரண்டாம் இடம்பெற்ற கொலம்பியா வீரர் ஜுவன் பேப்லோ மோன்டோயா (இடது), 3-ம் இடம் பெற்ற பிரிட்டன் வீரர் ஜென்சன் பட்டன்.




இந்திய அணிக்கு எதிரான நான்காவது சர்வதேச போட்டியில் சச்சின் வீசிய பந்தை லாவகமாக எதிர் கொள்கிறார் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்ஸமாம்




. பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் வெற்றிபெற்ற மகிழ்ச்சியை துடுப்புமட்டையை உயர்த்திக்காட்டி வெளிககாட்டுகிறார் முஹமட் கைவ்.



நியுசிலாந்து அணிக்கெதிரான போட்டியில் 80ஓட்டங்களைப்பெற்ற ஹேசல் கிப்ஸ்.



மேற்கிந்திய அணியின் கொலிஸ்ன வீசிய பந்தை சிறப்பாகத் துடுப் பெடுத்தாடி நான்கு ஓட்டங்களாக மாற்றும் மார்புச்சர்.

# கோப்பாய் பிரதேச செ.மட்ட. குழு நிலைப் போட்டி முடிவுகள்

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர்பிரிவின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளின் குழுநிலை போட்டிகள் முடிவுகள் வெளியாகியுள்ளன.

உதைபந்தாட்ட இறுதிப்போட்டி நிகழ்விற்கு றோயல் விளையாட்டுக் கழக அணியும், வீனஸ் விளையாடடுக்கழக அணியும் தெரிவாகியுள்ளன.

இவ் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நிகழ்வு கோப்பாய் பிரதேச மட்ட தடகளப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வின் போது நடைபெறவிருப்பதாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு உத்தியோகத்தா பா.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிவடைந்துள்ள குழுநிலை போட்டி முடிவுகள் வரு மாறு:

**எல்லே (ஆண்கள்)**

1ம் இடம்:-எவரஸ்ற் வி.க.
2ம் இடம்:-வீனஸ் வி.க.

**எல்லே (பெண்கள்)**

1ம் இடம்:-வீனஸ் வி.க.
2ம் இடம்:-தமிழ்நிலா வி.க.

**கரபந்தாட்டம் (ஆண்கள்)**

1ம் இடம்:-ஆவரங்கால் மத்தி.
2ம் இடம்:-இந்து இளைஞர்

கரபந்தாட்டம் (பெண்கள்)

1ம் இடம்:-இந்து இளைஞர் வி.க.
2ம் இடம்:-நீர்வேலி ஐக்கிய வி.க.

**வலைப்பந்தாட்டம் (பெண்கள்)**

1ம் இடம்:-கோப்பாய் ஐக்கிய வி.க.
2ம் இடம்:-வீனஸ் வி.க.

**துடுப்பாட்டம் (ஆண்கள்)**

1ம் இடம்:-கோப்பாய் ஐக்கிய வி.க.
2ம் இடம்:-ஆவரங்கால் மத்தி. வி.க.

(உ-68)

# சங்கானைப் பிரதேச மட்ட வருடாந்த விளையாட்டுப்போட்டி

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் இறுதிநாள் பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை வட்டக்கோட்டை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

சங்கானை பிரதேச செயலர் சி. ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி இ. றொகான் ராஜசிங்கம், மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த வெள்ளி மற்றும் சனிக் கிழமைகளில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பிரிவிலும் வட்டுக்கோட்டை வை.எம். எச்.ஏ. விளையாட்டுக் கழகத்தினர் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான மெய்வல்லுநா போட்டி முடிவுகளின்படி வட்டுக் கோட்டை வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக்கழகத்தினர் 76புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினை தமதாக்கிக்கொண்டனர்.

மேலும் 34புள்ளிகளைப் பெற்ற சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்ட அதேவேளை, இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகத்தினரும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தினரும் தலா 13புள்ளிகளைப் பெற்றுக்கொண்டு 3ஆம் இடத்தினை தமதாக்கிக் கொண்டனர்.

மேலும் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டி முடிவுகளின்படி 74 புள்ளிகளைப் பெற்று வட்டுக் கோட்டை வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக்கழகத்தினர் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

இரண்டாம் இடத்தினை 23புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட சங்கானை யுத் விளையாட்டுக் கழகத்தினரும் 3ஆம் இடத்தினை 21புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகத்தினரும் தமதாக்கிக் கொண்டனர்.

இதனைவிட சங்கானை பிரதேச மட்ட அனைத்துப் போட்டி முடிவுகளின் படி வட்டுக்கோட்டை வை.எம். எச்.ஏ.விளையாட்டுக்கழகத்தினரே முதலாம் இடத்தினை தக்கவைத்துக்கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் தொடர்ச்சியாக 3வருடங்களாக சங்கானை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளின் அனைத்துப் போட் முடிவுகளின்படி முதலாம் இடத்தினை பெற்றுவரும் இக்கழகத்தினருக்கு சொந்தமாகவே அவ் வெற்றிக்கேடயம் வழங்கப்பட்டிருந்தமையும் சிறப்பான விடயமாகும்.


இதேவேளை, சங்கானைப் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து போட்டி முடிவுகளின் படி இரண்டு கழகங்கள் இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டிருந்தன. சங்கானை யுத் விளையாட்டுக் கழகத்தினரும் அராலி மாவத்தை விளையாட்டுக் கழத்தினருமே இரண்டாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

குறிப்பாக இறுதிநாள் நிகழ்வின் சிறப்புப் போட்டியாக நடைபெற்ற சங்கானை பிரதேச மட்ட உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினர் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாடடுக் கழகத்தினரை 4:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தினை தமதாக்கிக்கொண்டனர்.

மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளில் ஆண்களுக்கான சிறந்த மைதான நிகழ்ச்சிகளுக்கான வீரர்களாக சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கு.குகப்பிரசாத் மற்றும் தே.ரஜிவ் காந் ஆகியோர் தெரிவாகியிருந்த அதேவேளை, சிறந்த சுவட்டு நிகழ்ச்சிகளுக்கான வீரராக இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பகீரதன் தெரிவாகியிருந்தார்.

பெண்கள் சுவட்டு நிகழ்வுகளுக்கான சிறந்த வீராங்கனையாக வட்டுக்கோட்டை வை.என்.எச்.ஏ.விளையாட்டுக்கழகத்தினைச் சேர்ந்த ஜெ.ஸ்ரீவித்தியாவும். மைதான நிகழ்ச்சிகளுக்கான சிறந்த வீராங்கனையாக இதே கழகத்தைச்சேர்ந்த ஜெ. கி.றொசானியும் தெரிவாகினர். குறிப்பாக 2004ஆம் ஆண்டுக்கான சிறந்த மெய்வல்லுநர் வீரராக இளைய நட்சத்திர விளையாட்டுக கழகத்திணைச் சேர்ந்த பகீரதன் தெரிவாகியிருந்தார்.

(உ-68)




செபாங்கில் (மலேசியா) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மலேசிய கிராண்ட் பிரீ ஃபார்முலா-1 கார் பந்தயத் தில் முதலிடம் பெற்று, கைப்பற்றிய கோப்பையுடன் ஜெர்மனி வீரர் மைக்கேல் மாக்கர். இவர் தொடர்ந்து மூன்றாவது முறை யாக இப் போட்டியில் பட்டம் வென்றுள்ளார்.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

81

## நான்காம் பகுதி
## முக்குவர் சட்டம்

### 1.மட்டக்களப்பு தேசம்

எல்லா விதமான சடங்குகளிலும் விழாக்களிலும் வண்ணாருக்கும் வள்ளுவருக்கும் பிரதானமான பங்குண்டு. கலியாணச் சடங்கிலும் மரணச்சடங்கிலும் பறைமேளம் அடிக்கப்படும். இராசமரியாதைகளுக்கு உரியவர்கள் ஊர்களுக்குப் போகுமிடத்து நிலபாவாடை போடுவதும் பந்தலமைத்துப் பாவாடை கட்டுவதும் வழமை. அவற்றோடு கும்ப தோரணங்களும் அமைக்கப்படும். விழாக்களிலுஞ் சடங்குகளிலும் கடமைபுரிகின்ற வண்ணார், நாவிதர் முதலாயினோருக்கு ஆண்டுதோறும் வெள்ளாமைக்காலத்திலே படி நெல்லு வழங்கப்படும்.

முற்காலங்களிலே கிராமப்புறங்களிலுள்ள குடியானவர்கள் மண் வீடுகளில் வசித்தனர். அந்த வீடுகளை வைக்கோலால் வேய்ந்தனர். மட்டக்களப்பு வாசிகள் மிகக்கூடுதலான அளவிலே மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள். தானியங்களையும் பலவகையான உணவுப் பொருட்களையும் சேகரித்து வைப்பதற்கும் அவற்றைப் பயன்படுத்தினார்கள். செம்பு ,பித்தளை ஆகிய உலோகங்களால் உருவாக்கப்பெற்ற பாத்திரங்களையும் அதிகமாகப் பயன்படுத்தினார்கள். வீடு வாசல்களும் அவற்றின் சுற்றுப்புறங்களும் கிரமமாகவுஞ் செப்பமாகவும் துப்புரவு செய்யப்படுவது வழக்கம். வீட்டுப்புறங்கள் வெள்ளிக்கிழமைகளிற் சாணத்தினால் மெழுகப்படும். பிள்ளைகள் அதிகமான வெள்ளி நகைகளை அணிவது வழக்கம். அது பழங்காலம் முதலாக நிலவி வரும் வழமையாகும்.

### வேளாண்மையும் செய்கை பண்ணும் விதங்களும்.

முற்காலங்களில் வேளாண்மையே மட்டக்களப்பில் வாழ்ந்த மக்களின் பிரதான தொழிலாகும். அங்கு மிகப் பரந்த வயல் நிலங்கள் அமைந்திருந்தன அவை பெரும்பாலும் குடி மனைகளைச் சூழவன்றி, அவற்றுக்குப் பல மைல்களுக்கு அப்பால் இருந்தன. அவை பிரதானமாகப் படுவான் கரையிலே அமைந்திருந்தன. பெரும்பாலான வயல்கள் மானாவாரி நிலங்களாகும். கோடை காலங்களில் அவை மேய்ச்சல் நிலங்களாகப் பயன்பட்டன. மிகப்பெருந்தொகையான மாடுகளும் எருமைகளும் குடியானவர்கள் வசமாய் இருந்தன. எனவே பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியன மிகுதியாகவும் மலிவாகவும் கிடைத்தன. என்று ஐரோப்பியர் எழுதிய நூல்களிலும் அறிக்கைகளிலும் கூறப்படும். கிழக்கிலிருந்து மலைப்பிரதேசங்களிற்கும். மாத்தறைக்கும்சென்ற வியாபாரிகள் பெரும்பாலும் பொதி மாடுகளைப் பயன்படுத்தியமையும் குறிப்பிடத்தகுந்தது.

மட்டக்களப்பிற் காணப்பட்ட நிலபோக முறையும் நிலச்செய்கை முறையும் அப்பிராந்தியத்திற்கே தனித்துவமானவை. வேளாண்மை தொடர்பான மொழிவழக்கும் சடங்குகளும் அத்தகையனவாகும். அவை, பெரும்பான்மைத் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவானவை. வேளாண்மையில் முன்மாரி, காலவெள்ளாமை (பின்மாரி) என்ற இரு போகச் செய்கை முறைகள் உண்டு. முன் மாரிச் செய்கையிற் புரட்டாதி முதல் தை மாதம் வரையான காலப் பகுதியிற் நெல் விதைப்பு நடைபெறும். நெல் விதைப்புத் தொடங்கும் காலம் பருவ காலம், மழைவீழ்ச்சி, தரையின் நிலப்பாங்கு ஆகியவற்றைப் பொறுத்திருக்கும். முன் மாரியிலும் இரு விதமான செய்கை முறைகள் உண்டு. அவற்றில் ஒன்று வயலை உழுது நெல் விதைக்கும் முறையாகும். மற்றையது நிலத்தைச் சேறடித்துப் பரம்படித்தல் மூலம் செய்கை பண்ணும் முறையாகும். இரண்டாவது முறையிலே பயிர்ச்செய்கை தைமாதத்தில் ஆரம்பமாகும். இரு வகையான முறைகளுக்கும் அறுவடைக்காலம் பங்குனி, சித்திரை மாதங்களாகும்.

பின்மாரி எனப்படும் கால வெள்ளாமை நீர்ப்பாசன வசதியுள்ள நன்செய் நிலங்களில் மட்டுமே செய்கை பண்ணப்படும். பங்குனி, சித்திரை மாதங்களில் நெல்விதைத்து, ஆவணி மாதத்தில் அறுவடை செய்வார்கள். அக்காலப்பகுதியிற் சொற்பமாகவே மழைபெய்வதால் நீர்ப்பாசன வசதியுள்ள வயல்களில் மட்டுமே கால வெள்ளாமை செய்யமுடியும். காலவெள்ளாமை செய்யும் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கேற்ற வகையில் முற்காலங்களிலே பட்டிப்பளை ஆற்றைச் சேர்ந்த நீர்ப்பாசன வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

முன்மாரிச் செய்கை முறையில் ஒரு வயல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். உடைமைக்காரனாகிய போடியாருக்கென ஒரு பகுதி புறம்பாகச் செய்கை பண்ணப்படும். அதனை முத்தெட்டு என்பர். முல்லைக்காரனுக்கு ஒதுக்கப்படும் பகுதி முல்லை வயல் எனப்படும். எஞ்சிய பாகம் வயலைச் செய்கை பண்ணுவோரின் பங்குகளாகப் பிரிக்கப்படும். ஒரு வயலானது இருவது அமணம் விதைப்புத் தரைக்கு மேற்பட்டதாயின் அதன் நான்கிலொரு பகுதி முத்தெட்டாகக் கொள்ளப்படும். அதே அளவான நிலம் முல்லைக்காரனின் பங்காக ஒதுக்கப்படும். வேளாண்மையின் எல்லா அம்சங்களையும் அவனே மேற்பார்வை செய்து நடப்பிக்கின்றமையால் அவனுக்குத் சில சமயங்களிலே சற்றுக்கூடுதலான அளவு நிலம் ஒதுக்கப்படும். நிலத்தை செய்கை பண்ணுவோரை வெளியான் என்று சொல்வர். அவர்கள் ஒவ்வொருவரினதும் பங்கு பொதுவாக ஈரமணத்திற்குக் குறையாத அளவுடையதாய் இருக்கும். நிலத்தின் பண்பிற்கமைய சில சமயங்களிலே பங்குகளின் அளவுகள் வேறுபடுதல் கூடும். இலவிசம் என்ற மேலதிகமா்ன பங்கொன்றை முல்லைக்காரனுக்கு விடுவதுண்டு.

உதாரணமாக ஒரு நெற் காணி 20 1/2 அமணம் அளவுடையதாகில் அது மேல்வருமாறு பங்கு கொள்ளப்படும்.

முத்தெட்டு- 4 அமணம், முன்னிலை வயல்- 4 அமணம், இலவிசம்- 1/2அமணம், வெளியான் வயல் 6 -12 அமணம்.

அந்த நெற்காணி 8 பங்குகளைக் கொண்டதாயிருக்கும். அதனை வெளியான் வயற் பங்குகளைப் பெற்ற ஆறு பேரும் ஏனையவிரு பங்குகளுக்கென ஒதுக்ப்படும் கூலியாட்கள் இருவரோடு கூடி எல்லாமாக எட்டுப்பேர் செய்கை பண்ணுவார்கள் ஒரு போக வேளாண்மை செய்வதற்குத் தேவையான 20 1/2 அமணம் விதை நெல்லும், அவர்களின் சீவனத்திற்கு வேண்டிய 16 அமணம்படி நெல்லும் எல்லாமாக 36 1/2 அமணம்நெல்லை அவர்களுக்கு போடியார் கொடுப்பது வழமை. வேளாண்மை விளைந்த பின்பு அந்தத் தொகையான நெல்லுடன் அதற்கு வட்டியாக 50 வீதம் நெல்லையும் அவர்கள் போடியாருக்குப் ஒப்படைக்கவேண்டும். ஏறாவூர், அக்கரைப்பற்று ஆகியவற்றைத் தவிர்ந்த பிற ஊர்களிலுள்ள முஸ்லிம்கள் 50 வீதம் வட்டிகொள்வதில்லை.

ஆனால், அதற்குப் பதிலாகச் செய்கை பண்ணுவோருக்குரிய நெல்லின் ஒரு பாகத்தை எடுத்துக்கொள்வார்கள். அது அவர்களுக்குக் கொடுக்கப்படும் படி நெல்லின் இரு மடங்கானதாய் இருக்கும்.

போடியாரின் முத்தெட்டுவயலைச் செய்கை பண்ணுவதற்கு வேண்டிய பொருத்தனை இல்லாதவிடத்துக் கடனாகவும் படி நெல்லாகவும் கொடுக்கப்படும். நெல்லுக்கு 50 வீதம் வட்டியாகக் கொள்ளப்படும். அத்துடன் வெளியான் வயல்களில் விளைந்த நெல்லில் ஒரு பகுதி காணிக்காரர் என்ற வகையிற் போடியாருக்குரியதாகும்.

(தொடரும்)

## 6 மாதங்கள் முன்பு
## நாய்க்கடிக்கு இலக்கான 70 வயது முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

6 மாதங்களுக்கு முன்பு நாய்க் கடிக்கு இலக்கான முதியவர் உரிய தடுப்பு மருந்தேற்றாமையால் நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

வண்ணார்பண்ணை சிவன் கோவிலடியைச் சேர்ந்த லெட்சுமண ஆச்சாரி வேணுகோபால ஆச்சாரி (வயது-70) என்பவரே இவ்விதம் மரணமடைந்தவராவார்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்பே நாய்கடித்ததாகவும் 6 நாட்களின் பின்னர் குறிப்பிட்ட அந்த நாய் இறந்து விட்டபோதிலும் இவர் உரிய சிகிச்சை பெறுவதில் ஆர்வமற்றிருந்தார் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, நேற்று முன் தினம் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவர் மரணமடைந்துள்ளார். (உ)

## மரத்தில் இருந்து குரங்கு பாய்ந்தது மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் படுகாயம்

(மருதங்கேணி)

வீதியோர மரமொன்றிலிருந்து குரங்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன் மீது பாய்ந்ததில் அதில் பயணித்துக் கொண்டிருந்த பெரிய பளைப் பகுதியைச் சேர்ந்த எஸ்.தீபன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

பெரிய பளைப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மோட்டார் சைக்கிளில் மிக வேகமாக இந்த இளைஞன் சென்று கொண்டிருந்தபோது அவ் வீதியில் உள்ள புளியமரத்திலிருந்த குரங்கு ஒன்று ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள்மீது திடீரென பாய்ந்துள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த இளைஞன் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததனால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. (உ-35)

## அரசியல் பாதிப்புக்கு ஆளான ஆசிரியர்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)

கல்வித் துறையில் அரசியல் ரீதியாக பாதிப்புக்குள்ளான ஆசிரியர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக பாதிக்கப் பட்ட ஆசிரியர்களை நேற்று முன்தினம் அமைச்சின் அலுவலகத்தில் வைத்து சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில்,

அண்மைக்காலங்களில் பொதுச் சேவைகள் ஆணைக்குழு தனது பணிகளைச் சரிவரச் செய்யமுடியாத நிலையில் இருந தமையினால், அரசியல் ரீதியில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்க முடியாதிருந்தது.

எனவே, தேர்தலின் பின்னரே இவர்களுக்கு நிவாரணங்களை வழங்கி உதவ முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

(உ-60,10)

## அர்த்தமற்ற திட்டங்களை முன்வைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மக்கள் நிராகரிப்பது திண்ணம்
### பிரதமர் பிரஸ்தாபம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அர்த்தமற்றது என்பதை புரிந்து கொண்டு மக்கள் திட்டவட்டமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களிப்பார்கள் எனப் பிரதமர் ரணில விக்கிரம சிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மக்கள் மத்தியில் விநியோகம் செய்து அது பற்றி மக்களுக்கு புரிய வைக்கவேண்டும்.

உண்மையிலேயே ஐக்கிய மகள் சுதந்திர முன்னணி வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் மக்களை ஏமாற்றுவதற்காக வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையாகும்.

நாட்டில் வன்முறைகளை தோற்றுவித்து நாட்டையே குட்டிச்சுவராக்கி வந்த கட்சிகள் எல்லாம் ஐக்கியதேசிய முன்னணியில் இணைந்து கொண்டு மக்களிடம் வாக்குக் கேட்டுவருகின்றன.

இனவாதக்கட்சிகளான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் எல்லாம் ஆட்சி பீடம் ஏறினால் நாடு எவ்வாறிருக்கும் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

(உ-61,10)

## ஐக்கிய தேசிய முன்னணிக்கு வெளிநாடுகளில் இருந்து நிதி
### ஐ.ம.சு.மு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவாகச் செயற்படும் தனியார் தேர்தல் கண்காணிப்புக் குழுவொன்றுக்கு வெளிநாடுகள் தாராளமான நிதி உதவி செய்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.


அமெரிக்கா,கனடா,ஜப்பான் ஆகிய நாடுகள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியை விட பத்துமடங்கு அதிகமான நிதியை வழங்கியிருப்பதாக அக் குற்றச் சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இக்குற்றச்சாட்டுக்களை சம்பந்தப்பட்ட தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் மறுத்துள்ளனர். (ம)

# நானிலத்து மாந்தர்களின் அல்லல் பிறவி

# அறுத்தாண்ட செல்லப்பா சுவாமிகள்

''பழம் பாக்கு வெற்றிலை
பச்சரிசி தேங்காய்
இளநீர் தேனேந்தியெழிலார் ~
அளவிலா
மங்கையரு மாடவரு மங்கு
நல்லூர்த் தேரடியில்
எங் நருவைக் கண் டேனினிது
தேரடியில் தேசிகனைக் கண்டு
தரிசித்தேன்
ஆரடா நீயென்றான் தேரடாவுன்
என்றான் சிரித்து''



செல்லப்பா சுவாமிகள் பிறந்த இடம் நல்லூர். கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் தங்கள் அருள் தாகத்தைத் தீர்ப்பதற்கு நல்லூரானையும் நல்லூர் வீதியையுமே பெரிதும் தேர்ந்தெடுத்தனர்.

### ஞானக்குமரன்

வட்டுக்கோட்டை வேளாளரான வல்லிபுரத்திற்கும் பொன்னார் எனும் அன்னைக்கும் 1860 ஆம் ஆண்டு பிறந்த ஞானக்குமரனே செல்லப்பராவார். செல்லப்பா இளமையில் கந்தர்மடத்து சைவப பிரகாச வித்தியாசாலையிலும் பின் யாழ்.மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றதாக அறிய முடிகிறது. படிப்பை முடித்த பின் ஆராய்ச்சியாகப் பணிபுரிந்தார். ஆனாலும் வெகுவிரைவில் உற்றார், உறவினர், படிப்பு, பதவி யாவற்றையும் துறந்து விசர்க் கோலம் பூண்டார்.

**செல்லப்பா சுவாமிகளின் குருபூசைத்தினம் இன்றாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் இங்கு பிரசுரமாகின்றது.**

செல்லப்பா உள்ளத்தில் ஊறிய ஞானப்பித்து வெளியே வழியத் தொடங்கிய வேளையில் பித்தர் போலவும், பிசாசு பிடித்தவர் போன்றும், குழந்தை போன்றும் காணப்பட்டார். தனக்குள்ளே பேசிக் கொள்ளல், ஓமோம் என்று தலை அசைத்தல், வலக்கையை மேலே உயர்த்தி விசுக்கி உரத்துப்பேசி வருவோர் போவோரை தம்மை அண்டவிடாது துரத்துதல் போன்ற செய்கைகளில் ஈடுபட்டார்.

நல்லூர் வீதியில் நடமாடித் திரிந்த கடையிற் சுவாமிகள் இவரை நோக்கி ''முற்றிவிட்டது அவிழ்த்து விடுங்கள்'' என்றார். இவருக்குப் பசி ஏற்படும் போது செம்மணி வயல் வெளிகளில் சென்று மற்றோர் கொடுப்பதை வாங்கி உண்டார்.

ஞான நாட்டமுள்ளவர்கள் அவரைச் சித்தராகக் கருதினர். செல்லப்பர் தாம் விரும்பிய நேரங்களில், கீரிமலை, கதிர்காமம் என யாத்திரைகளை மேற்கொள்வார்.

### கொழும்புத்துறையாரின் சுவாமிகள்

செல்லப்பர் ஓர் பேரறிவாளர். அவிப் பாகத்தைப் படைத்து செல்லப்பரை நினைத்தால் அவர் அங்கு தோன்றி அமுது செய்வாராம். கொழும்புத் துறையூரைச் சேர்ந்த விதானையார் திருஞானசம்பந்தர், பாடகர் துரையப்பா என்பவர்கள் இவரது சிவத்தொண்டர்கள் ஆதலால் இவரை கொழும்புத்துறையாரின் சுவாமி எனவும் அழைத்தனர். இத்தகைய கொழும்புத் துறையாருடன் சேர்நது எங்கள் யோகசுவாமிகளும் செல் லப்பரை தரிசிக்கச் செல்வார். இவ்விளைஞனைக் கண்டதும் ''ஆரடா நீ?'' என அதட்டினார். பின்னர் தேசிகரின் உபதேசங்களை தலைமேற்கொண்டு சுவாமிகளும் அவருடன் சேர்ந்துதிரிவார். இறுதியில் செல்லப்பர் தம் கொட்டிலில் சுகவீனமுற்றுக்கிடந்தார். அதற்கு முன்பாகவே, சுவாமிகளைப் பார்த்து ''நீ எங்கேனும் வேர் வராயைப்பார்'' என கூறியிருந்தார். குரு மொழியைக்கைக் கொண்ட சீடர் கொழும்புத்துறை சென்று சந்தியில் இருந்த இலுப்பை மரத்தின் வேரில் அமர்ந்து கொண்டார். 'நீயென நானென வேறில்லை' என குருவானவர் சீடருக்கு முன் மொழிந்துள்ளார்.

சுகயீனமுற்ற தேசிகரை பார்க்க சென்றவர்களுக்கும்

**செ.தெய்வமாலினி**
**கொழும்புத்துறை**

தேசிகர் ''இன்று இரவு ஓர் புதினம் நடக்கும்'' எனக் கூறி ''நீ வருவாயோ?'' என சுவாமிகளை கேட்டார். அடுத்த நாட்காலை அவர் சென்ற போது நடராச பாவத்தில் தேசிகர் விறைத்துக் கிடந்தார்.

செல்லப்பா சுவாமிகளின் சமாதியடைந்த நாள் 1915 பங்குனி அச்சுவினியாகும். ஒவ்வொரு வருடமும் இத் தினத்தில் நல்லூர் தேரடிக்கும் அமுது படைத்து நல்லூரில் அவரின் நினைவு மடத்தில் அபிஷேகமும் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

## பழைய மாணவர் சங்கம் பல்வேறு உதவிகள்

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கு கல்வி உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை அண்மையில் வழங்கியுள்ளது.

பாடசாலையின் நூல்நிலையம் மற்றும் பௌதீக விஞ்ஞான ஆய்வு கூடம் அகியவற்றுக்குத் தளபாடங்களையும், புகைப்படப் பிரதி இயந்திம் ஒன்றையும் இப் பழைய மாணவர் சங்கம் அண்மையில் வழங்கியுள்ளது.

இதேவேளை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் இலண்டன் கிளை ஏற்கனவே இப் பாடசாலைக்கு றோணியோ இயந்திரம் ஒன்றை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. ( உ-35)

## கிளி-ஆஸ்பத்திரிகளுக்கு இரத்தப் பரிசோதனை உபகரணங்கள்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வைத்திய சாலைகளுக்கு இரத்தப் பரிசோதனை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

மலேரியாத் தாக்கத்தினை இலகுவில் இனம்கண்டு கொள்ளக் கூடிய இவ் உபகரணங்கள் கிளிநொச்சி மாவட்டத் மலேரியா தடுப்புப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் ஆய்வு கூட வசதிகள் அந்தக் கிராமப்புற மருந்தகங்கள் மற்றும் வைத்தியசாலைகளிலும் மலேரியா நோய் சிகிச்சையை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி பகுதிகளிலுள்ள ஆய்வுகூட வசதிகள் அற்ற வைத்திய சாலைகளில் இவ் உபகரண வசதிகள் இன்மையால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களையும் அனுபவித்து வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-35)

# தேர்தல் கண்காணிப்பாளர்களை விமர்சிப்பது விசமத்தனமானது

## கண்டிக்கிறார் பாக்கியசோதி சரவணமுத்து

(லண்டன்)

**எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடை பெறவுள்ள தேர்தலைக் கண்காணிப்பதற்காக பல்வேறு நாடுகளிலுமிருந்து இலங்கை வந்திருக்கும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் பக்கச் சார்பின்றி நடந்து கொள்வார்கள்.**

கண்காணிப்புப் பணிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் எவருக்கும் வளைந்து கொடுக்கமாட்டார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் தேர்தல் வன்செயல்களைக் கண்காணிப்பதற்கான இணையத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பாக்கிய சோதி சரவணமுத்து.

தேர்தல் கண்காணிப்புப் பணிகள குறிதது லண்டன் பி.பி.சியின் தமிழ் சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துக கருத்து வெளியிடுகையில்,

எதிர்வரும் பொதுத் தேர்தல் நீதியானதாகவும், நியாயமானதாகவும் நடை பெற வேண்டும் என்பதே தேர்தல் கண்காணிப்பாளர்களின் நோக்கமும் விருப்பமுமாகும்.

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் சார்பாக நின்று கொள்வதால் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

வன்முறைகள் அற்ற தேர்தலை நடத்துவதற்காகவே கண்காணிப்பாளர்கள் இங்கு வந்திருக் கின்றார்கள்.

வன்முறையாளர்களை ஆட்சிப் பீடமேற்றுவதா? இல்லையா? என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள்.

கண்காணிப்பாளர்கள் யாருக்கு வாக்குப் போடவேண்டும்? என மக்களுக்கு எதுவும் சொல்லவும் மாட்டார்கள். அந்த அதிகாரம் அவர்களுக்கு இல்லை.

தேர்தலில் மக்கள் மனதைத் திசை திருப்பும் காரியங்களில் கண்காணிப்பு அமைப்புக்கள் ஈடுபடுகின்றதாக பல்வேறு குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன.

வன்முறைக் கண்காணிப்புக் குழுவான எங்களுடைய பணி, வன்முறை நடக்கின்றதா எனக் கண்காணித்து அது பற்றிய தகவல்களை வெளியிடுவதே.

கண்காணிப்புப் பணியை குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு ஆதரவாக குறிப்பிட்ட கண்காணிப்பு அதிகாரி செய்கின்றார் என்றால் அதை மக்கள் சுட்டிக்காட்டவேண்டும் அப்போது தான் நாம் சம்பந்தப்பட்ட அந்த அதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அதனைவிடுத்து, வீணாக ஊடகங்களூடாக விமர்சிப்பது விசமத்தனமானது. இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெறுவதற்குச் சர்வதேச நாடுகள் நிதியுதவி வழங்கிவருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

உண்மையிலேயே தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்கென்றே சர்வதேச நாடுகள் நிதியுதவி வழங்கின.ஆனால், ஜனாதிபதி இதனைத் தவறாக எண்ணிக் கொண்டுள்ளார்.

முன்னரும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்குச் சில நாடுகள் நிதியுதவி வழங்கி வந்தன. ஆனால, அப்போது இரகசியம் பேணப்பட்டது.

தற்போது அப்படியில்லை நிதியுதவிகளை வழங்கிவரும் நாடுகள் தாம் வழங்கிய நிதி விபரத்தை ஊடகங்கள் மூலமாக அம்பலமாக்கி வருகின்றன. நீதியாகக் கிடைக்கின்ற ஒவ்வொரு சதத்துக்கும் அதனைத் தருகின்ற அமைப்புக்கள் முறையாகக் கணக்குக் காட்ட வேண்டும்.இதுதான் வழமை.

இவ்வாறிருக்கையில், ஜனாதிபதியும் அவரைச்சார்ந்த சில அரசியல கட்சிகளும் பல்வேறு குற்றச் சாடடுக்களை அடுக்கி வருகின்றார்கள்.

இவர்கள் இத்தகைய அர்த்த மற்ற குற்றச்சாட்டுக்களை முன் வைக்கின்றதைவிட அந்த, குற்றச் சாட்டுக்கான ஆதாரத்தை முதலில் நிருபிக்கவேண்டும்.

இந்தக் குற்றச் சாட்டின் ஒரு பகுதியாகவே தேர்தலுக்காக வெளிநாடுகள் வழங்கும் நிதியுதவிகள் இம் முறை அதிகமாகக் கிடைத்திருப்பதாக கூறப்படுகின்றது.

இதற்கிடையில் தேர்தலைக் கணகாணிப்பதன் மூலமாகப் பணம சம்பாதிக்க வேண்டும் என நாங்கள் எண்ணுவதில்லை. தேர்தல் கண்காணிப்பு செய்வதற்கென ஓர் வழி முறையிருக்கின்றது. கொடையாளி நாடுகளுக்கு நாங்கள் நிதி கோரி அனுப்பும் ஆவணங்களில் அந்த வழிமுறைகளைத் தெளிவாக தெரியப்படுத்துகின்றோம்.

ஒவ்வொரு செயலுக்கும் எவ்வளவு பணம் செலவாகின்றது என்பதைக் கூறுவோம். செலவீனங்கள் பற்றி நிதி வழங்குவோர் எம்முடன் விவாதிப்பார்கள்.

செலவு குறைவாகும் வகையில் நாம் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை அரசியல்வாதிகள் கூற விரும்பினால் அதனை அறிய நாம் ஆவலாக இருக்கின்றோம்.

அவர்கள் உதவி செய்வதை விட்டு விட்டு இவ்வாறு வீணாக விமர்சிப்பதையிட்டு நான் மிகுந்த வேதனையடைகின்றேன் என்றார். (உ-62,10)

## முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளைக் கையளிக்க கருணா தயாராகி வருகிறாராம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கிழக்கு மாகாண முன்னாள் தளபதி கருணா தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காணிகள், கால் நடைகள் தொடர்பாக முஸ்லிம் கட்சிகளுடன் பேசுவதற்கு தயாராகி வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம்களுக்குச் சொந்தமானதென கருதப் படும் இக் காணிகளை அவர்களிடம் மீள அளிப்பதற்கு கருணா தயாராக இருப்பதாகவும், முஸ்லிம் மக்கள் சுகந்திரமாக தமது தொழில்களை அங்கு மேற்கொள்வதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ள இணங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் சைச்சாத்திட்ட பின்னர் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளை கையளிப்பது சம்பந்தமாக விடுதலைப்புலிகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தி வந்ததுடன், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளையும அவர்களிடம் கையளிக்க இணக்கம் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-60,10)

# இன்று ஒரு தகவல்

## இயேசுவின் இருப்பிடம்

அது ஒரு சிறு கிராமம்.அங்கே ஒரு பள்ளிக்கூடம். அங்கு நிறைய மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரிடமும் கிறிஸ்மஸ் விடுமுறை வருமுன்பு கிறிஸ்து பிறப்பு விழாவை அங்கு கொண்டாடுவது வழக்கம்.

அது எப்படி என்றால் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேஷம் போட்டுக்கொண்டு நாடகம் போல் நடித்துக் காட்டுவது வழக்கம். மாதா, சூசையப்பர், ஆடு மோய்ப்பவர்கள், மூன்று ராஜாக்கள், காபிரியேல் தூதர் என எல்லோரும் அதில் வருவார்கள். காபிரியேல் வானத்தில் தோன்றுவார். உங்களுக்காக இறைவன் மனுவாக அவதரித்துள்ளார் என்று சொல்வார். வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றும். மூன்று ராஜாக்கள் பின் தொடர்ந்து வருவார்கள். இவற்றை மாணவர்கள் மேடையில் நடித்துக்காட்டுவார்கள்.

இப்படி ஒவ்வொரு வருடமும் கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாடுவது வழக்கம். அதுபோல் கொண்டாட வேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறது. யார் யாருக்கு என்னென்ன வேடம் என்பதை ஆசிரியர்கள் முன்கூட்டியே தீர்மானித்தார்கள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வேடம் கொடுத்தாயிற்று. அந்த வகுப்பில் மக்குச் சிறுவன் ஒருவன் இருந்தான். விளையாட்டில் கூட மற்ற மாணவர்கள் அவனைச் சேர்த்துக்கொள்வதில்லை. அப்படியான சிறுவன். அவனுக்கும் ஒரு வேடம் கொடுக்கவேண்டும்.

எல்லோரும் அவனுக்கு என்ன வேடம் கொடுக்கலாம் என்று யோசித்தார்கள். இறுதியாக ஆசிரியர் சொன்னார்."இதோ பார்! சூசையப்பரும், மாதாவும் ஒவ்வொரு விடுதியாக இடம் கேட்டுக்கொண்டு உன்னிடம் வருவார்கள். நீ விடுதியில் இருந்து வெளியே வந்து இங்கே இடம் இல்லை என்று கூறவேண்டும். உன் வேலை அவ்வளவு தான்" என்றார். சரி என்று தலையாட்டினான் அந்த மாணவன். தினமும் தவறாமல் ஒத்திகை நடந்தது. விழா நாளும் வந்து சேர்ந்தது.

கூட்டத்தில் இருந்த எல்லோரும் மேடையை ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். நிறைமாதக் கர்ப்பிணியான தேவமாதாவை அழைத்துக்கொண்டு சூசையப்பர் ஒவ்வொரு விடுதியிலும் இடம் கேட்கிறார். இவனிடமும் வருகிறார். இவன் "இடமில்லை" என்று பதில் கூறவேண்டும். பதில் கூறவில்லை. பேசாமல் அவர்களைப் பார்த்துக்கொண்டு நிற்கிறான். மேடைக்குப் பின்னால் நின்ற ஆசிரியர் இவன் பேசவேண்டிய வசனத்தைக் கூறினார். "இடமில்லை என்று சொல்" என்கிறார்.

இவன் அப்போதும் ஒன்றும் கூறாமல் நின்றான். கூட்டத்தில் ஒரே சலசலப்பு. எல்லோரும் சிரித்தார்கள். மாதாவுக்கும் சூசையப்பருக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. தவிக்கின்றனர் இவன் கடைசியாக வாயைத்திறந்தான். "ஐயா இங்கு இடமில்லை. ஆனால் எங்கள் வீட்டிற்கு வாருங்கள். அங்கே நிறைய இடமுண்டு" என்றான் கண்ணைத் துடைத்துக் கொண்டே. பார்த்தால் அவன் கண்கள் கலங்கியிருக்கிறது. அவன் உண்மையாகவே அழுதுவிட்டான். அதனால் அவனுக்கு வார்த்தை வரவில்லை. கூட்டத்தில் சிரித்தவர்கள் மௌனமாகி விட்டார்கள். தன்னைனேயே மனுவாகத் தந்த இயேசுகிறிஸ்துவுக்கு உண்மையான பிறப்பிடம் இது போன்ற கள்ளமில்லாத உள்ளங்கள் தான்.

பத்து சிறுவர்கள் பாவமன்னிப்புக்காக ஒரு.ஃபாதரிடம் பாவமன்னிப்புக்கேட்டு வந்தார்களாம். அவர் ஒவ்வொருவராக அழைத்து பாவ சங்கீர்த்தனம் கேட்டுக்கொண்டிருந்தார். முதலில் ஒருவன் வந்தான். "ஃபாதர் நான் ஒரு மட்டையைத் தூக்கிக் கிணற்றில் போட்டு விட்டேன். என் பாவத்தை மன்னியும்" என்றான். அடுத்தவன் வந்தான். "நானும் அந்த மட்டையைத் தூக்கி ஒரு முறை கிணற்றில் போட்டேன். என்னை மன்னியும்" என்றான். அடுத்தவன் வந்து இதையே சொன்னான். 9பேரும் வரிசையாக வந்து இதேவிடயத்தைச் சொல்லி மன்னிப்புக்கேட்டார்கள்.

கடைசியாகப் பத்தாவது சிறுவன் வந்தான்..ஃபாதர் கேட்டார் "நீயும் மட்டையைக் கிணற்றில் போட்டாயா?" என்றார். "இல்லை ஃபாதர் மட்டையே நான் தான். என்னைத்தான் அந்த ஒன்பது பேரும் கிணற்றில் தூக்கிப்போட்டார்கள்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் திருமலையில்

(திருகோணமலை)

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

ஸ்பெயின் நாட்டவர்களான எட்வன்டோ,அல்வாடோ, அஸ்ஸிவடோ செல்வி புளோறன்ஸ் பல்டாலியோ ஆகியோர்களே திருகோணமலை மாவட்டத்தில் சென்று பல்வேறு பிரமுகர்களையும் சந்தித்து தேர்தல் கண்காணிப்புத் தொடர்பாக கலந்துரையாடி வருகின்றார்கள்.

அதற்கமைய, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்கள் வாக்களிக்கும் வகையில் 15 வாக்களிப்பு நிலையங்கள் கொத்தணி முறையில் அமைக்கப்படவுள்ளதாக சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

இந்த வாக்குச்சாவடிகளில் வாக்களிப்புக்கள் நடைபெறும் போது கண்காணிப்பாளர்கள் முழுநாளும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதற்குப் பதிலளித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு இடம்பெறும்போது தாம் கண்காணிப்புப் பணிகளில் முழுமையாக ஈடுபடப் போவதாக உறுதியளித்தனர்.

(உ-61,10)

# ஆயுதம் தரித்த முகமூடிக் கும்பலால் நள்ளிரவில் நகைகள் கொள்ளை

(பருத்தித்துறை)

நள்ளிரவு வேளையில் ஆயுதங்களுடன் வீட்டினுள் நுழைந்த முகமூடித் திருடர் கும்பல் சுமார் 6 இலட்சம் பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது. புலோலி உபய கதிர்காமம் வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

அதே இடத்தில் வசித்துவரும் வே.சுப்பிரமணியம் என்பவரது வீட்டில் நள்ளிரவு 12.00மணியளவில் நுழைந்து உறக்கத்தில் இருந்த தாய் மற்றும் இரண்டு பிள்ளைகளைத் தாக்கி அவர்களிடமிருந்த பெறுமதியான நகைகளையும் ஒரு தொகைப் பணத்தையும் கொள்ளையிட்டு, அயல் வீட்டினுள்ளும் ஆயுததாரிகள் நுழைந்தனர்.

அவ்வீட்டில் இருந்தோரையும் கடுமையாகத் தாக்கியதுடன், அங்கிருந்த சிறுவனைக் கொலைசெய்யப்போவதாக மிரட்டி அவர்களிடமிருந்த நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இக் கொள்ளை பற்றி அயலவர்கள் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தபோதும் பொலிஸார் அவ்விடத்திற்கு வரும் முன்பே கொள்ளைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

பொலிஸார் கைவிரல் அடையாளம் பெறும் நிபுணர்களை அழைத்துச் சோதனைகளை மேற்கொண்டதுடன், இச்சம்பவம்பற்றித் தீவிர விசாரணையிலும் ஈடுபட்டுவருகின்றனர்.(உ-52)

# இராசிபலன்

**23. 03. 2004**

**(பங்குனி 10, செவ்வாய்க்கிழமை)**

**திருதியை முழுவதும்**

**அச்சுவினி பின்னிரவு 2.13 மணிவரை**

**இராகுகாலம் 3.16-4.46 மணிவரை**

**சுபநேரம் 10.46-12.16 மணிவரை**

**அமிர்த சித்தம்**

**மேடம்**

**பெரியோர் சந்திப்பு, காரிய அனுகூலம், போசன சுகம், சிந்தனை மிகுதி.**

**இடபம்**

**காரிய அலைச்சல், அமைதிக்குறைவு, தொழிலில் ஆர்வம், சுபசெலவு.**

**மிதுனம்**

**எடுத்த கருமங்கள் கைகூடும், பெருமையான சம்பவம், போசன நன்மை, பிரயாணம்.**

**கடகம்**

**நல்ல செய்தி, தொழில் விருத்தி, பிறர் உதவி, அதிகாரம்.**

**சிங்கம**

**கட்டுப்பாடு, இடமாற்றம், புதிய திட்டமிடல், அதிக யோசனை.**

**கன்னி**

**வீண் பிரச்சினை, காரிய தடங்கல், உடல்நலக் குறைவு, பிரயாணபயம்.**

**துலாம்**

**எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வசிந்தை, களஸ்திர நன்மை, தொழில் நன்மை.**

**விருச்சிகம்**

**நண்பர்கள் சந்திப்பு, செய்தொழில் விருத்தி, போசன சுகம், உடல்நலம்.**

**தனுசு**

**வியாபார நன்மை, சிறுவியாதி, வீண் மனஸ்தாபம், காரிய தாமதம்.**

**மகரம்**

**சகோதரர் உதவி, உற்சாகம், மாதா சுகம், முயற்சி தாமதம்.**

**கும்பம**

**பிரயாண நன்மை, கூட்டுமுயற்சி, போசன நன்மை, தனவரவு.**

**மீனம்**

**உஷ்ணநிலை, எதிர்பாராத செலவு, காரியதாமதம், வேலைப்பளு.**

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

# வாக்காளர் அட்டை விநியோகம் 26 ஆம் திகதிவரை இடம் பெறும்

(கொழும்பு)

வாக்காளர் அட்டைகள் யாவும் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் விநியோகிக்கப்படவேண்டும் என தபால் மா அதிபர் சகல தபாலங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்பு நாளை புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளது என்றும் நாளைய தினத்தில் வாக்களிக்க முடியாதவர்கள் வேறு ஒரு தினத்தில் வாக்களிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றதாகவும் தபால் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத நபர்கள் தத்தமது பிரதேசங்களில் உள்ள தபாலகத்திற்கு அடையாளத்தை உறுதி செய்து அவற்றைப பெற்றுகொள்ள முடியும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (உ-60,10)

# ஒலிசெற் நுளம்பு வலைகள் லயன்ஸ் கழகத்தால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் யாழ். பிராந்தியத்தினரால் தென்மராட்சி மற்றும் தாளையடி, செம்பியன்பற்று ஆகிய பிரதேசங்களில் வாழும் 5 ஆயிரத்து375 குடும்பங்களுக்கு "ஒலிசெற்' எனும் வகை நுளம்பு வலைகள் வழங்கப்படஎவுள்ளன.

இந் நுளம்பு வலைகள் நுளம்பினை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு வகை இரசாயனப் பூச்சு பூசப்பட்டதாக அமைந்துள்ளது. மேற்படி பிரதேச வாழ் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு நுளம்பு வலை வீதம் வழங்கப்படும் எனவும் இதற்குரிய பயனாளிகள் தெரிவு தற்பொழுது இடம்பெற்று வருவதாகவும் லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்தனர்.(உ-3)

# கல்வி உரிமைகளை உறுதி செய்வதில் ஐ.ம.சு. முன்னணி நாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதிலும் பாடசாலை மாணவர்களின் கல்வி உரிமைகள் உறுதி செய்யப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் வேட்பாளர் விமல் இரத்தின நாயக்கா தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில், தேசியக் கல்வித் திட்டத்தில் பாடசாலைக கல்வி முக்கிய இடம்பெறுவதால் நல்லதொரு கல்விக் கட்டமைப்பு நாடளாவிய ரீதியில் உருவாக்கப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இக் கல்விக் கட்டமைப்பு மீள அமைக்கப்படவேண்டும்.

இதேவேளை, எமது நாட்டில் ஆங்கில அறிவுள்ளார்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். இதனால் ஆங்கிலப் பாடத்தை கட்டாய பாடமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (உ-60.10)

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

- குறள்

# வலம்புரி

## நாட்டுமக்களின் தார்மீகக் கடமைகளில் இதுவும் ஒன்று

13 வது பாராளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் வேட்பாளர்களும், தேர்தல் திணைக் களமும் மிக மும்முரமாக ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது. இதேவேளை தென்பகுதியில் வாக்காளர்களும் உஷார் அடைந்து விட்டனர். ஆனால் வடபகுதியில் மட்டும் வாக்காளர்கள் இன்னமும்தேர்தலுக்கான ஆயத்தங்களில் இறங்க வில்லை. அவர்கள் நாமுண்டு, நம்பாடுகளென்ற மனநிலையில் இருப்பதைக் காணமுடிகிறது. இதிலிருந்து வடபுலத்து மக்களின் மனநிலை - அவர்களின் தேவைப்பாடு எவ்வளவு தூரம் வேறு பட்டுள்ளன என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

அவர்களின் மனநிலை, தேவைப்பாடு என் பனவற்றை தென்னிலங்கை மக்களோடு ஒப்பீடு செய்து பார்ப்பதுவும் ஏற்புடையதல்ல, ஏனெனில் நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருந்த போதும் கூட, தென்னிலங்கை நவீனத்துவத்தை நோக்கி வீறுநடைபோட்டுக்கொண்டேயிருந்தது.

ஆனால் வடபுலத்து நிலைமை அதுவன்று. குண்டுவீச்சு விமானங்களின் இரைச்சல்கள், பல் குழல் தாக்குதல்களின் நாசங்கள், எறிகணை களின் வீச்சுக்கள் என மரண பயத்தோடு காலம் கழித்த மக்கள் ஜனநாயகம், வாக்களிப்பு என்பன வற்றில் எதுவித அக்கறையுமின்றி இருப்பதில் தவறு காண்பதுவும் தவறே.

ஆனால் வாழ்வியல் என்பது நிலைமைகளுக்கு ஏற்ப ஒவ்வொருவரும் தம்மை சுதாகரித்துக் கொண்டு சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதேயா கும்.

அவ்வகையில் கடந்த காலங்களில் வட புலத் தில நடைபெற்ற தேர்தல்களில் மக்கள் தமது பூர ணமான பங்களிப்புகளை செய்யாதுவிடினும், அது அன்றிருந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப எடுக்கப்பட்ட முடிவுகளாக இருக்கலாம். ஆனால் இன்றைய சூழ் நிலையும், களநிலையும் அதுவன்று.

இம்முறை தேர்தலில் மக்கள் தமது வாக்கு களை பயன்படுத்த முன்வரவேண்டும். எவருக்கு வாக்களிப்பது என்ற கேள்விகளுக்கும், ஆராய்ச்சி களுக்கும் அப்பால், முதலில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ந் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதென்ற முடிவை அனைத்துமக்களும் எடுத்தாக வேண்டும். வாக்களிப்போமா? அல்லது விடுவோமா? அல்லது அன்றைய தினம் சிந்திப் போம் என்ற முடிவுகளெல்லாம் வாக்களிப்பிற்கு ஆரோக்கியமானதல்ல.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந் தராக இருந்த பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அவர்கள், யாழ்.மாவட்ட மக்கள் தேர்த லில் தவறாது வாக்களிக்கவேண்டுமென ஆலோசனை கூறியிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் யாழ். மாவட்டத்தில் முப்பத்தொரு வீதமான மக்களே வாக்களித்ததாக கருத்துக்கூறிய பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு வாக்களித்தவற்றி லும் கணிசமான வாக்குகள் செல்லுபடியற்றதாகி விட்டதென்ற உண்மையையும் அவர் ஞாபகப்படுத் தியுள்ளார்.

வாக்களிப்பில் அற்றுப்போன பட்டறிவு காரணமா கவே வாக்குகள் செல்லுபடியற்றதாகிவிடுகின்றன என்ற உண்மையும் இங்கு ஆய்வுக்குரியது.

வீகிதாசார பிரதிநிதித்துவத்தில் உள்ள விருப்பு வாக்கு முறைகள்-தெளிவற்ற விளக்கங்கள் கார ணமாக இத்தகைய செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை மிக உயர்வாக உள்ளது. இந் நிலைமை எதிர்வரும் தேர்தலிலும் நீடிக்கக் கூடிய சாத் தியக்கூறுகள் உண்டு. அதாவது, மக்கள் தேர்தலில் ஆர்வமின்றி இருப்பதன் காரணமாக அவர்க்ள் வாக்களிப்பது பற்றிய முறைகளைத் தெரிந்து கொள்வதிலும் அக்கறைகாட்டவில்லை. இந் நிலையில், வாக்காளர்கள் வாக்களிப்புத் தினத்தில் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்குச் சீட்டைப் பெற்று அதனைக் கையாளுகின்றபோது தவறு ஏற்பட்டுவிடும்.

எனவே, இத்தகைய தவறுகளை நீக்கி வாக் களிப்பில் எல்லோரும் கலந்து கொள்வது மக்க ளின் தார்மீகக் கடமையாகும்.

# சமாதானப் போர்வையில் சிரமத்தை ஏற்படுத்திய ஐ.தே.மு.அரசை மக்கள் புறக்கணிக்க வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ அறைகூவல்

(கொழும்பு)

சமாதானம் என்ற போர்வையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கடந்த 2வருடங்களாக மக்களைப் பெரும் சிரமத்திற்குள்ளாக்கி வந்துள்ளது என ஐக்கிய மக்கள் சுதத்திர முன்னணியின் இணை அமைப்பாளரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

நாரஹென்பிட்டியில் கடத்த சனிக்கிழமை இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித் தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

கடந்த இரண்டு வருட காலமாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத் துவதாகக் கூறி ஏழை மக்களை வதைத்து வந்துள்ளது.

பொருட்கள் மீதான வரிகள் மூலமாகவும் அத்தியா வசியப் பொருட்களை விலையேற்றியும் ஏழை மக்களின் வயிற்றில் நெருப்பை அள்ளி வீசிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்கென சர்வதேச நாடுகள் வழங்கிய நிதிகள் அனைத்தையும் அமைச்சர்களுக்கு ஊதாரித்தனமாகப் பகிர்ந்தளிதத்து.

இதனால் மக்கள் பெரும் துன்பப்பட்டார்கள்.ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து விரட்ட வேண்டும் என அரசியல் கட்சிகள் ஊடாக ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார்கள்.

இதன் காரணமாகவே ஜனாதிபதி அவசர அவசரமாக பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்த லுக்கு உத்தரவிட்டார்.

எனவே, ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி ஆட்சிக்கு வந்ததும் முதலில் அத்தியாவசியப் பொருட் களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி மக்கள் தமது வாழ்க்கையைக் கஷ்டமின்றி கொண்டு செல்ல வழி செய்யப்படும்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு நிதி உதவிகளை வழங்கவும் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும் விவசாயிகளுக்கு குறைத்த விலையில் உரங்களை விநியோகித்து விவசாயத்தை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (உ61,10)

# சமாதானத்தின் சாதக பாதகங்கள் குறித்து சர்வோதய ஏற்பாட்டில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சமாதான நிலையை மென்மேலும் ஆக்கபூர்வமானதாக்கி எதிர்காலத்தில் அது தொடர்பிலான திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் சர்வோதய அமைப்பின் ஏற்பாட்டில் அதன் யாழ். அலுவலகத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநா தன் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கலந்துரை யாடலில் சர்வோதய அமைப்பின் சமாதானச் செயற்றிட்ட இணைப்பாளர் லலிதா பீரிஸ் மற்றும் ஊடகவியலா ளர்கள்,மதகுருமார்,ஆசிரியர்கள் ,முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றிய சமாதானச் செயற்றிட்ட இணைப்பாளர் லலிதா பீரிஸ்,

ஐந்து தசாப்தங்களாக இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினைக்கு நீதியும் நியாயமுமான தீர்வு ஒன்றைக் கண்டு அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதில் சர்வோதயம் அக்கறையாகச் செயற்பட்டு வருகின்றது. இருவருட காலம் அமுலில் இருந்த போர் நிறுத்தப் புரித்துணர்வு ஒப்பந்தத்தின் சாதக,பாதகங்களை ஆராய்ந்து எதிர் காலத்தில் பல்வேறு பயனுள்ள வேலைத் திட்டங்களை நாம் முன்வைக்கவுள்ளோம்.

நிலையானதொரு சமாதானத்தை அடைய அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மட்டுமன்றி பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பொறுப்புணர்வுடன் பாடுபட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கில் பங்கேற்றவர்கள் தமது தரப்புக் கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட சமயம்,

சமாதான விடயத்தில் தலையிட்டு வருகின்ற நாடுகள மற்றும் அமைப்புக்களின் பணிகள் திருப்திகரமற்றதாக உள்ளதுடன்,அவர்கள் பல்வேறு உட்காரணங்களை முன்வைத்து வெளியில் சமாதான வேடமணிந்து நடக்கிறமை குறித்தும் எடுத்துக்கூறப்பட்டதுடன் நல்ல முறையில் சமாதானம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் யாழ். குடா நாட்டில் 63 நலன்புரி நிலையங்கள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.(உ-16)

# இரா. சம்பந்தன் யாழ்-வருகிறார்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளா இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் குழுவொன்று இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம வரவுள் ளது.

சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடை பெறவுள்ள தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்கவுள்ள இவர்கள், யாழ். மாட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்துல் வைத்து கட்சி உறுப்பினர் கள் ஆதரவாளர்கள் ஆகியோரையும் சந்தித்து தமது நிலைப் பாடு தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர். (உ-16)

# வங்கிகளுக்கு நிகராக தபாலகங்கள் தரமுயரும்

## தபால்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வங்கிகள் மூலம் மக்கள் பெற்றுக்கொள்ளும் சேவை களை தபாலகங்களிலும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகை யில் தபால் நிலைங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப் படவுள்ளதாக தபால் மற்றும் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் டி.எம் ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

கண்டி இராஜவல்ல தபால் நிலையத்தொடர்பாடல் இல்லத்தினைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில,

காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து காணிஉறுதிகளை வழங் குவதறகுப் பதிலாக விசேட அட்டைகளை வழங்குவதுடன் இந்த அட்டைகளை தபாலகங்களில் அடகு வைக்கக் கூடியதாக அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். (உ-61,10)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எழுந்திருங்கள், விழித்துக் கொள் ளுங்கள். இனியும் தூங்க வேண்டாம. எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்தின் உள்ளும் இருக்கிறது.

சுவாமி வீவேகானந்தர்

## தவக்கால சிந்தனை-27

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் நுழைந்து அட்டகாசம் செய்தபோது மக்கள் வீடிழந்து உணவின்றி புல்லின் வேர்களை உண்ட கொடுமையைத் தொலைக்காட்சி யில் கண்ட கல்நெஞ்சமும் கரையும். கரைந்ததா? இராணுவத்திற்கு அதெல்லாம் தெரியாது. அவர்களின் நோக்கமே வேறு! கோத்ரா ரயில் எரிப்பின் போது பூட்டிய ரயில பெட்டியில் இருந்து ஒரு ஆண்முகம் பெரும பீதியோடு கெஞ்சுகின்ற காட்சி! அந்த தனி மனிதனின் கதறல் சண்டாளர்கள் மனதை மாற்றியதா? அவர்களின் நோக்கமே வேறு! இதோ 38 ஆண்டுகளாக 'நான் நலம் பெறு வேன்' என மனதில் ஆசைகளை வளர்த்துக் கொண்டு ஒவ்வொரு முறையும் குளத்தில் இறங்கத் தவிப்பதை யார் கண்டுகொண் டது? இயேசு மட்டும் தானே! தனிமனிதனின் தேவைகளை கண்டுணர்ந்தவர் இயேசு. அவர்களது துயர் துடைக்க வீதிவீதியாய் செனறவர் இயேசு. தனி மனிதனின் வேத னையை உணர்ந்து பல அற்புதங்கள் செய் கிறார். நம்மைச் சுற்றி எததனையோ பேர் கேட்பாரற்று வறுமையிலும் தனிமையிலும் நோயி லும் கிடக்கிறாகள். அவாகளது வேதனையை நாம் உணர்ந்து செயற்படுகிறோமா?

காவலன்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**இல்ல தடகளப்போட்டி - 2004**

காலம்: 23.03.2004 (இன்று) செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
இடம்: வீரசங்கிலியன் விளையாட்டு மைதானம் (யா.தே.க.க.)

தலைவர்
கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
பிரதம விருந்தினர்
கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
(தமிழ்த்துறை, யாழ். பல்கலைக் கழகம்)
பரிசில் வழங்கல்
திருவாட்டி மைதிலி விசாகரூபன் M.Sc
(கலாசார உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

23.03.2004

கல்லூரிச் சமூகம்,
யாழ். தே.க.க.

போட்டிசிறப்புற வாழ்த்துவோர்:
**E.S. பேரம்பலம் & சன்ஸ்**
50-52-54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபன்னி: 021-222-2988 தொலைநகல்: 021-222-2368
(C/7446)



உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019



ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி,
காரைநகர்
T.P : 0602212472



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை.**

**பொதுப்பட்டமளிப்பு விழா**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2004.03.27 ஆம் திகதி ஆறு அமர்வு களில் நடைபெறும்.

இப்பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பட்டம் பெறு வோருக்கு 23.03.2004 தொடக்கம் 26.03.2004 ஆம் திகதி வரை காலை 9.00- 12.00 மணி வரையும் மாலை 1.30 - 3.30 மணி வரையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்விக் கிளையில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு விழாவில் பங்கு பற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றிச் சீட்டினைக் காண்பித்து பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| திகதி | நேரம் | பீடம் |
|---|---|---|
| 2004.03.23 | காலை 9.00-12.00 | உயர் பட்டப்படிப்புகள்பீடம் |
| | மாலை 1.30- 3.30 | கலைப்பீடம் |
| 2004.03.24 | காலை 9.00- 12.00 | கலைப்பீடம் |
| | மாலை 1.30- 3.30 | கலைப்பீடம்இராமநாதன் நுண்கலைக் கழகம் |
| 2004.03.25 | காலை 9.00- 12.00 | சித்தமருத்துவம், விவசாய பீடம் |
| | மாலை 1.30 - 3.30 | வவுனியா வளாகம், முகாமைக்கற்கைகள் வணிக பீடம் |
| 2004.03.26 | காலை 9.00 - 12.00 | மருத்துவ பீடம் |
| | மாலை 1.30 - 3.30 | விஞ்ஞானபீடம் |

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்ட ணமாக ரூபா 25.00ஐ (போட்டோ ஒன்றிற்கு) பல்கலைக் கழக காசாளரிடம் செலுத்தி பற்றிச்சீட்டினையும் சமர்ப்பித்தல் வேண்டும். பல்கலைக்கழக அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

22.03.2004. (C/7460)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**

**பட்டச்சான்றிதழ் எழுதுதல்**

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பட்டதாரிச் சான்றிதழ்களை வடிவாக எழுதக் கூடியவர்கள் யாழ்.பல்கலைக்கழக பதிவாளருடன் 24.03.2004 அன்று 3.00 மணிக்கு நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கட்டண விபரம் நேரில் அறியத்தரப்படும்.

பதிவாளர்

22.03.2004 (C/7459)


## விசேட பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர்சங்க தென மராட்சிக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் நாளை பி.ப.3.00 மணக்கு சாவகச்சேரி இந்துக் கல் லூரியில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரை யும் தவறாது கலந்துகொள்ளு மாறு அதன் செயலாளர் கேட் டுள்ளார். (ச)

## அரச ஊடகத்தை...

ஊடகம் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்கிறது என்று குற்றஞ்சாட்டும் தார்மீக உரிமை அந்தக் கட்சிக்குக் கிடையாது.

எனவே, தனியார் ஊடகங்க ளுக்கும் திட்டவட்டமான சில நிர் ணயங்களை மேற்கொள்ளவேண் டும் எனவும் தேர்தல் கண்காணிப்பு மதிப்பீட்டு நிலையம் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளது.(த)




**இன்று எனக்கு, நாளை உங்களுக்கும்.....!**

நான் பிறந்து வளர்ந்த மண்ணில் இராணுவம்தான் எனக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமானால் - அதை எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டியவர் யார்? நானா?

என் மண்ணில் சுதந்திரமாக துண்டுப்பிரசுரம் விநியோகிக்க முடியவில்லை. ஒருசிலரின் அட்டகாசத்திற்கு எஞ்சிய அனைவரும், அடங்கிவாழ வேண்டுமானால் - அதை எண்ணி தலைகுனிய வேண்டியவர்கள் யார்? நானா?

இலட்சியப் போர் நடத்தும் போராளிகளுக்கு ஆதரவு வழங்குவதுபோல் பாசாங்கு பண்ணி இல்லாததையும் பொல்லாததையும் எழுதி மக்களை ஏமாற்றுபவர்களைப் பற்றி வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் யார்? நானா?

முளைத்து நாலு இலை விடுமுன்பு தலைமைக்கே அவமானம் தேடும் வகையில் அடாவடித்தனம் செய்து வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர்களை அவமதிக்கும் வகையில் நடப்பவர்களை எண்ணி வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் யார்? நானா?

என்னைத் தெரிவு செய்து எனது மக்களை சந்திக்க விடாது என்னை இடையூறு செய்பவர் யார்?

நான் பிறந்து வளர்ந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட, கூட்டமாக நின்று உரையாட, களங்கமற்று சிரித்து வாழ உங்களைப் போல் ஆசைப்படுபவர்களில் ஒருவன்........................................ நான்

சுதந்திரக் காற்றை முற்று முழுதாக சுவாசிக்க விருப்பம் கொண்டிருக்கும் எண்ணற்ற எம் இனத்தினுள் ஒருவன் ...........நான்

அன்று தொட்டு இன்றுவரை எம் இனத்தின் போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டவர்களுள் ஒருவன் ........................ நான்

எக்காலத்திலும் எம் இனத்தைக் காட்டிக் கொடுத்து வாழ்வதை கனவிலும் எண்ணாதவர்களுள் ஒருவன் ........................ நான்

பட்டம் பதவிக்காய் அலைந்து திரியாமல் கண்ணியமாய் அரசியல் நடத்திய எம் தலைவர்கள் பலரின் வரிசையில் ஒருவன் ...... நான்

உள்ளதை உள்ளபடி நேருக்கு நேர் சொல்லி அதனையே செய்யும் மிகச் சிலருள் ஒருவன் ................................ நான்

வாய்மைக்கும் நேர்மைக்கும் இலக்கணமாக விளங்கிய தலைவர்கள் வரிசையில் ஒருவன்........................................ நான்


கூட்டணி ஆதரவாளர்களை நேரில் சந்தித்து உரையாடத் துடிக்கும் ஒரு வன் ........................................ நான்

இத்தகைய சக்தியோடு, கறைபடியாக் கரங்களோடு இனப் பற்றுணர்வோடு உங்கள் வாக்குகள் கேட்கும் எம் அணியினை அமோக வெற்றியடையச் செய்யுங்கள்.

**வீ.ஆனந்தசங்கரி**

(தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி) தலைமையிலான

**சுயேச்சைக் குழு : 1**



X X

விளம்பர அனுசரணை :- இடம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் தமிழ் மக்கள்

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் சுயேச்சைக்குழு - 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டாது என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம்.


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.